உ

கடவுள் துணை.

# கடற்கொள்ளைக்காரன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
26 OCT 1927
MADRAS

ஸ்ரீமான்
ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்களால்
எழுதப்பெற்று

சென்னை
ஆனந்தபோதினிப் பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியா ரவர்களால்
வெளியிடப்பெற்றது

1927

காபிரைட்] [விலை ரூபா 1-8-0

இப்புத்தகங்கள் துரைத்தனத்தாரால்
அங்கீகரிக்கப்பெற்றவை.

## மாணவர்க்குரிய புத்தகங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| கம்பராமாயண சங்கிரகம் ... | 2 | 0 |
| சதானந்தர் ... | 1 | 4 |
| ஜீவகன் ... | 1 | 0 |
| குசேலோபாக்கியானவசனம் | 1 | 0 |
| கர்ணன் சரிதை ... | 0 | 12 |
| ஸ்ரீ பீஷ்மவிஜயம் ... | 0 | 10 |
| வீரத்தன்மையுள்ள ஹிந்து மாது சிரோமணிகள் ... | 0 | 10 |
| கீர்த்திசிங்கன் ... | 0 | 7 |
| அரிச்சந்திரன் சரிதை ... | 0 | 8 |
| சகோதரவாஞ்சை ... | 0 | 7 |
| நீலக்கொடி ... | 0 | 5 |
| மணவாளன் ... | 0 | 3 |
| பரசுராமன் ... | 0 | 3 |
| தசாவதார மகிமை ... | 0 | 6 |
| சிசுபாலன் ... | 0 | 8 |
| சண்டோபாக்கியானம் ... | 0 | 6 |
| கருணாகரரும் சத்தியசீலரும் | 0 | 8 |
| சத்திய வசனி ... | 0 | 4 |
| அங்கதன் ... | 0 | 4 |
| நாலு மந்திரி கதை ... | 0 | 4 |
| விமலன் ... | 0 | 4 |
| கண்ணபிரான் ... | 0 | 4 |
| செய்யுட்பாடத் திரட்டு ... | 0 | 4 |
| சீமந்தனி ... | 0 | 8 |
| தக்கன் ... | 0 | 6 |
| மங்களேசுவரன் ... | 0 | 8 |
| நரிவிருத்தம் மூலமும் உரையும் | 0 | 4 |
| ஸ்ரீ பாலன் ... | 0 | 10 |
| உதயணன் ... | 0 | 8 |
| தசக்கிரீவன் ... | 0 | 14 |
| போஜசரித்திரம் ... | 0 | 5 |

ஆனந்தபோதினி ஆபீஸ்,
சௌகார்பேட்டை, மதராஸ்.

18659

எல்லப்பன் தங்கையாகிய பாப்பம்மாள், இராமாபாய் சீமாட்டியை நோக்கி "நல்ல பதிலாக விருந்தால் அது பேயினிடமிருந்து வருவதாயினும் சிலருக்கு மிக்க விருப்பமே. ஆனால் இதில் வீண் குறி சொல்வது அதிகமாக விருக்கிறது. இது நம்போன்ற மெய்யான மதப்பற்றுடையவர்களுக்கு மனதிற்கு ஒப்பத்தக்கதல்ல. உமக்கு என்னவென்று புலப்படுகிறது?" என்றாள்.

இராமாபாய்:-"அம்மா! நீ கூறுவதில் ஏதோ விஷயம் இருக்கலாகும். ஆனால் இந்நாட்டாராகிய நாங்கள் மற்ற பேர்களைப்போ லல்ல. இப்போது இம்மாது நமது முதலாளியின் சுற்றத்தாளாக விருப்பதால் நாமும் சென்று குறிகேட்காமலிருப்பது நலமாகவிராது. ஆகையால் என் பெண்களையும் போய்க் கேட்கச் சொல்லுகிறேன். அதனால் ஒரு கெடுதியும் நேரிடாது. அவர்கள் ஏதேனும் வேணுமென்று கெடுதியாய்க்கூறினும் பின்னால் அதைப்பற்றி மனஸ்தாபப்படுவார்கள்" என்றாள்.

அச்சமயம் மற்றபேரும் குறிகேட்கப் பீதியடைந்து பேசாமலிருந்ததை யுணர்ந்த கிருஷ்ணப்பன் தைரியநாதம் பிள்ளையின் நிலைமையை நோக்கினான். ஏனெனில் அவர் தமது புருவங்களை நெறித்துக்கொண்டு தம் வலது காலைப் பலமாய்த் தரையில் உதைத்துக்கொண்டார். அதனால் அவர் தமது கோபத்தை மிக்க கஷ்டத்தோடு அடக்கிக் கொண்டிருக்கிறார் என்று புலப்பட்டது. அதைக் கண்டதே கிருஷ்ணப்பன் அன்னியருக்காகத் தான் கேட்பதற்குப் பதில் தானே குறிகேட்கத் தொடங்கிப் பின் வருமாறு கூறினான்:—

“நாகம் மாளே நற்பெருந்தாயே
பாட்டின் உயர்வைநீ பாங்குட னறிவாய்
இயக்கன் பாட்டவன் இறந்தபின்னரும்
புத்திமான்களால் போற்றப் படுதல்போல்
எனக்குப் பின்னல் என்து பாடலும்
கொண்டாடப் படுமோ குறைவிலா ஜனகன்
பாடல்தோற் றிடச்செய் பான்மையதாமோ
மகிமைசேர் மாதே வழுத்திடு வாயே”

நாகம்மாள் உடனே பின்வருமாறு அதற்குப்பதில் கூறத் தொடங்கினள்:—

“மழலைக் குழந்தை வாக்கு வன்மைசேர்
அறிஞர் தமக்கிணை யாக வெண்ணல்போல்
உயரப் பறக்கும் ஒப்பில் கருடன்
தனக்கிணை யாகத் தத்தி நடக்கும்
வாத்தது நினைக்கும் மதியினைப் போல
ஜனகன் றனக்குநீ தான்மே லாக
நினைக் கின்றனை நீ யாதலின் நிகழ்த்திய
வாத்தையும் வார்த்தை வாயில் வராத
பிள்ளையும் போல்வாய் பெருமைவிட் டொழியே”

இம்மொழிகளைக் கேட்டதே கிருஷ்ணப்பன் தன் உதடுகளைக் கடித்துக்கொண்டு தோட்களை யசைத்துச் சற்றுநேரம் தியங்கினன். ஆனல் சீக்கிரத்தில் மனதைத் திடப்படுத்திக்கொண்டு தைரியத்தோடு பின் வருமாறு விடையளித்தான்:—

“வாத்துக்கிணையா வழுத்திவிட் டாயெனை
என்தற் பெருமையை யின்றே விட்டனன்
இனிப்பே ராசை யெனைச் சாராது
என் பாட்டதனை யிக்கட லொலியில்

புகுத்திடு கின்றேன் பொங்குமிக் கடலொலி
தூரத்தில் வருவோர் சுகமுறச் செவியில்
இன்னிசை தருதல்போல் எனது பாடலும்
அதனெடு சார்ந்தே அச்சுகந் தருகவே"

கிருஷ்ணப்பிள்ளை யவ்வாறு தைரியத்தோடு பதிலளித்துப் பின்னிடைந்தா னெனினும், மற்றவர்களில் எவருக்கும் முன்சென்று குறிகேட்கத் தைரியம் வரவில்லை.

இவர்கள் நடக்கையைக் கண்ட தைரியநாதம் பிள்ளைக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் "கோழை முட்டாள்கள்! குலசேகரன்! நீ கூடவா அவளிடம் போய்க் குறி கேட்க அஞ்சுகிறாய்? ஒரு கிழவிக்கு அஞ்சுகிறாயா? ஏன்? போய்க் குறுக்குத் துறையிலிருக்கும் பன்னிரண்டு பீரங்கிகளையுடைய கப்பல் உன்கூட்டாளியா என்று கேட்கலாமே" என்றார்.

குலசேகரன் மீனாளையே உற்று நோக்கிக்கொண் டிருந்தான். தைரியநாதம் பிள்ளை கூறுவதற்கு நாம் என்ன பதில் கூறுகிறோ மென்பதை இவள் நோக்கிக்கொண்டிருக்கிருள் என்று அவன் எண்ணிக் கொண்டான்.

மாதர்கள் மெச்சுவதற் கென்று ஒரு காரியத்தைச் செய்யும் ஆடவர்கள் பலருண்டு. அவர்களை இரண்டு பகுதியினராகப் பிரிக்கலாம். ஒரு பட்சத்தார் தாங்கள் காதல் கொண்டிருக்கும் மாதர் தம்மை மெச்சிப் புகழ்ந்து தம்மேல் விருப்பம் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு அவர்களது திருஷ்டியின் முன் எத்தகைய காரியத்தையும் செய்யத் துணிவார்கள். தங்கள் செய்கையால் தங்களுக்குப் பிராணபத்து நேர்வதையுங்கூட அச்சமயம் பொருட்படுத்த மாட்டார்கள். ஏனெனில் இவர்களது அறிவாகிய கண் காதல் என்ற திரையால் மறைக்கப்பட் டிருக்கிறது.

ஒருகாலத்தில் சுந்தன் உபசுந்தன் என்ற இரண்டு அரக்கர்கள் ஒரு தேவமாதைக் கண்டு அவள்மேல் பிரியங் கொண்டார்கள். அம்மாது மிக்க புத்திசாலி யாதலின் அவர்களை நோக்கி "நீங்களிருவரும் யுத்தம் புரியுங்கள். உங்களில் எவன் ஜெயிக்கின்றானோ அவனுக்கு நான் உரியவளாவேன்" என்றனள். அந்த காமப்பித்துக் கொண்ட மூடர்கள் யுத்தம்செய்தால் நம்மில் ஒருவன் அல்லது இருவரும் இறக்க நேரிடலாகுமே யென்பதைச் சிந்தியாமல் யுத்தம் புரிந்து இருவரும் மாண்டார்கள். தேவமாது சனியன்கள் ஒழிந்தனவென்று சென்றாள்.

இன்னொரு பட்சத்தார் தம்மனைவியர் கூறியவழியே யெப்போதும் நடப்பவர்கள். இவ்விருபாலரும் பெண்களிலும் பேதையராவர். தைரியதாதம் பிள்ளை கூறியதைக் கேட்ட குலசேகரன் முதலில் தடுமாற்ற மடைந்தான். ஆனால் மீனாளுக்குத் தன்மேல் விருப்பம் குன்றாதவாறு நடந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் உதித்ததும் தைரியமடைந்து "நான் ஆடவனுக்கேனும் ஸ்திரீகளுக்கேனும் இதுகாறும் பயந்தது கிடையாது. கிருஷ்ணப் பிள்ளை! நமது தலைவர் கூறிய கட்டளையைக் கேட்டாயல்லவா? எனக்கு மந்திரம் எவ்வளவு தெரியுமோ அவ்வளவு தான் கவிபாடுவதும் தெரியும். ஆகையால் எனக்காக நீ அக்குறியைக் கேள்" என்றான்.

கிருஷ்ணப்பன் மறுபடி கூறும்படி ஆலசியம் செய்யவில்லை. அச்சடங்கில் நடக்க வேண்டியபடி குலசேகரன் கரத்தைப் பற்றிக்கொண்டு கூடாரத்தின் முன் சென்று நின்று,

"பிச்சி மலைவாழ் பெரியவளே
பெரியோர் புகழும் நாகம்மாள்

மலைபோ லலைகள் வளர்ந்தேதான்
வளமுத் தெறியும் முந்நீரில்
அண்ட மதிரும் பீரங்கி
அகன்ற வுடைவாள் அணிவீரர்
பொன்னும் மணியும் பல்பணியும்
புகழார் பண்டம் பலயாவும்
நிறைந்தே யோடும் நாவாயோர்
நெடுந்துறை சேர்ந்த ததனிடத்து
நமது நண்பர்க் குறவுண்டேல்
நன்று யியம்ப வேண்டு கின்றோம்
கருதும் பொருளைக் கூறவல்ல
கனத்தோய் இதனைக் கூறுதியே"

என்று குறியைக் கவியாய் உரைத்தான்.

நாகம்மாள் இது காறும் கேட்கப்பட்ட கேள்விகளுக் கெல்லாம் சற்றும் ஆலசியம் செய்யாமல் மறுவிநாடியே விடையளித்துக்கொண் டிருந்தாள். ஆனால் இக்கேள்விக்கு மட்டும் அவள் உடனே விடையளிக்காமல் நெடுநேரம் ஆலசியம் செய்தாள். அது அவள் தடுமாற்ற முற்றதால் நேர்ந்த தென்றும் அல்லது விடையளிக்க வெறுப்பால் நேர்ந்த தென்றும் தெரியவில்லை.

---

## 31—வது அத்தியாயம்.

நாகம்மாள் குலசேகரன் கேள்விக்கு நெடுநேரம் விடையளிக்கவில்லை. கடைசியில் அவள் விடையளிக்கத் தொடங்கினாள். அப்போது அவளுக்கு மற்ற பேர்க்கு விடையளித்தபோ திருந்த குரலைக்காட்டிலும் மிக்க தாழ்ந்ததும் துயரமுடையதுமான குரலாகவிருந்தது. அவள் கடைசியில் அளித்த விடை பின்வருமாறு:—

"அந்தக் கப்பலில் ஆர்ந்தபொன் சிவப்பே
பார்த்திட வங்கே படிந்த விரத்தம்
கருஞ்சிவப் பானதக் கடலைநான் பார்த்தேன்
ஆங்கொரு கழுகு ஆகாரத்தினைக்
கௌவிச் சென்றது காலிலும் மூக்கிலும்
இரத்த முறைந்தே யிருந்ததிக் கேள்வியைக்
கேட்பவன் கையினைக் கிட்டியே பார்க்க
அவ்வுதி ரக்கறை அமைந்திருந் திடுமேல்
இவனுமக் கப்பலி லிருப்பவர் தம்மொடு
சேர்ந்தவ னென்றே செப்பிட லாமே"

அந்த விடையைக் கேட்டதும் குலசேகரன் வெறுப்போடு தன் கரத்தை நீட்டி "என்போல் பன்முறை யெவரும் தென் நாட்டாரின் எல்லைக்குட்பட்ட கடற்பிரதேசத்தில் சென்றிரார்கள். அங்கு சென்றால் எப்படியும் போராட்டம் நடப்பது நிச்சயமே. ஆயினும் என் கரத்தில் கௌரவத்தால் துடைக்கப்படாத இரத்தக் கறை யெதுவுமில்லை" என்றான்.

ஏனெனில் நாகம்மாள் விடை கூறியதன் அர்த்தம் "அக்கப்பலிலுள்ள பொன்சிவந்திருக்கிறது (அதாவது அது அக்கிரமத்தால், இரத்தம் சிந்தியதால் சம்பாதிக்கப்பட்டது). அங்குள்ள இரத்தம் பார்ப்பதற்குக் கறுப்பாகயிருக்கிறது (அதாவது அது அக்கிரமமாகச் சிந்தப்பட்டது). நான் அக்கடலை நோக்கியபோது ஒரு கழுகு தன் வேட்டையைப் பிடித்துக்கொண்டது. அது மூக்கில் ஒரு குத்து மாமிசத்தைக் கௌவிச் சென்றது. அதன் கால் நகங்களும் மூக்கும் இரத்தம் உறைந்தனவாயிருந்தன. இப்போது இக் கேள்வியைக் கேட்பவன் தன் கரத்தைப் பார்த்துக்கொள்ளட்டும். இவன் கரத்தில் இரத்தக்கறையிருந்தால் இவனும் அக்கப்பல் கூட்டத்திற் சேர்ந்தவன்" என்பதே.

இப்போது அக்கப்பல் அயோக்கியரும் கொலை செய்பவர்களுமாகியவர்களைச் சேர்ந்ததென்றும் குலசேகரனும் அதைச் சேர்ந்தவனுயின் அப்படிப்பட்டவனே யென்றும் நன்கு வெளியாகிறது. அதனுற்றுன் குலசேகரனுக்கு வெறுப்புண்டாயிற்று. அவன் மேற்கண்டவாறு விடையளித்ததும், தைரியநாதம் பிள்ளை உறுதியான மொழிகளால் "அத்தென் தேசத்தாரோடு ஒருபோதும் சமாதானமாய் வாழமுடியாது. அவர்கள் பேராசைக்காரர்கள். கடலைக்கூட எல்லையிட்டுத் தங்களுடையதென்று வைத்துக் கொண்டிருக்கிருர்கள். நம் நாட்டுக் கப்பித்தான்கள் பலர் அவர்களைப்பற்றி முறையிட்டுக்கொண் டிருக்கிருர்கள். நான் அந்நாட்டாரை யடியோடு வெறுக்கிறேன்—வலியச் சண்டைக்கு வருகிறவர்கள்—என் பாட்டனுர்கூட அவர்களுடைய அக்கிரமங்களைப்பற்றிக் கூறியிருக்கிருர். அவர்களிடம் சத்தியமாவது நன்றியாவது இரக்கமாவது இல்லை" என்று தாராளமாகக் கூறினுர்.

குலசேகரன் அவர் வார்த்தைகளைக் கேட்டதும் பின்னும் உற்சாகமடைந்து "ஆம் ஆம். நண்பரே! தாங்கள் கூறுவது சத்தியமான மொழிகளே. நாங்கள் இறற்றைப் பற்றி அதிகமாகக் கேள்விப்பட்டிருக்கிறேம். உலகின் கிழக்கு பாகத்தில் அவர்களுக்கிருக்கும் பூமியால் அவர்கள் கண்மண்தெரியாத அகங்காரங்கொண் டிருக்கிருர்கள். யாரேனும் பலமின்றி யவர்களிடம் சிக்கிக்கொண்டால் அவர்களை அந்தக் கீழ் நாட்டில் தங்களுக்குள்ள சுரங்கங்களில் வேலைசெய்ய அடிமைகளாக்கிக் கொண்டுபோய் விடுகிருர்கள். இதனுல் அவர்களைச் சந்தித்தால் நான் சற்றும் இடம் விடாமல் ஒருகை பார்த்தே விடுவது வழக்கம்" என்றுன்.

தைரியநாதம்பிள்ளை "பேஷ்! அதுதான் சரி. நானு

யிருந்தால் அப்படித்தான் செய்வேன். கப்பலின் நாற்புறங்களிலுமுள்ள பலகைச்சுவர்களாகிய மதிற்சுவர்கள் இருக்குமட்டும் அத்துஷ்டர்களுக்குச் சற்றும் இடந்தரலாகாது. சரி இருக்கட்டும். இனி நடப்பதைக் கவனிப்போம். ஒருவரும் இங்கு கோபித்துக் கொள்ளலாகாது. எல்லாரும் நண்பர்களே. ஓ புனிதம்! இப்போது நீ போய்க் குறி கேட்கலாம் ; உனக்கு வடநாட்டுப்பாஷையும் தெரியும்; நீ கேட்கலாம்'' என்றார்.

புனிதம் பின்னிடைந்து கொண்டு, "தந்தையே! இப்போது நமது விளையாட்டிற்குப் பொருத்தமான விதமாக நான் கேட்கக்கூடியது ஒன்றையும் காணேமே'' என்றாள்.

தந்தை:—"சே! இதென்ன முட்டாள் தனம்? உன்னுடைய அடக்கம் அளவுமீறிப்போவதால் கௌரவமான விளையாட்டைக் கெடுத்து விடாதே'' என்று கூறிக்கொண்டே அவளை முன்னுக்குத் தள்ளினார். பைரவி கிருஷ்ணப்பன் அவள் கரத்தைப்பற்றிக்கொண்டான்.

தைரியநாதம் பிள்ளை அவனை நோக்கி "ஏனையா இத்தகைய சமயத்தில் குறி கூறும் ஆளுக்கும் நாணமுடைய கன்னிகைகளுக்கும் இடையில் நீர் துவி பாஷகராகவிருக்க வேண்டியவர்தானே. இப்போது நமது புனிதவதிக்காக நீர் கேளும்'' என்றார்.

கிருஷ்ணப்பன் புனிதத்திற்கு வந்தனமனித்து "அம்மா! நீ பேசாமலிரு. இப்போது நான் கேட்கும் கேள்விகளுக்கு நீ சற்றும் பொறுப்பாளியல்ல. உன்பாட்டிற்கு நீ பேசாமலிரு'' என்று கூறிவிட்டுச் சற்றுநேரம் என்ன கேட்பதென்று சிந்தித்துப் பார்த்தான். கடைசியில் மனதில் ஏதோ ஒரு யோசனை யுதித்தவன்போல் பின் வருமாறு கேட்டான்.

"பிச்சி மலையுறை பெரியா ளேகேள்
நச்சியுன் பாலொரு நற்பொருள் கேட்க
அச்சங் கொண்டுள அரிவைய ருளத்தின்
இச்சையை யுரைத்தனிற் கியல்பே யன்றோ
இனிதா நமதுநற் புனித வதியின்
மனத்தினில் வந்து மருவிய காதல்
வனப்பொடு இன்பம் வளருதற் குரியதோ
அனைத்தையு நீயிங் கறையவேண் டுதுமே"

என்று கேட்டான்.

அதைக்கேட்டதும் நாகம்மாள் சற்றும் தடுமாற்றமின்றி உடனே பின் கண்டவாறு மொழிந்தாள்:—

"இந்தப் பெண்ணின் இருதயந் தூயது
அரியநற் குணமெலாம் அமைந்துள திவளிடம்
சூரியன் றனது தோற்றங் கண்ட
தாமரை மலர்போல் தைய லிவளை
விரும்பிக் காணும் வீரனு மகிழ்வான்
அவனால் இன்பவாழ் வடைகுவா ளிவளே"

அம்மொழிகளைக் கேட்டதும் புனிதம் அங்கிருந்து நழுவிவிட நினைத்தாள். அவ்வாறு நினைத்த நாணம் பொருந்திய புனிதத்தை அவள் தந்தை பற்றிக் கொண்டு, "மிக்க சரியான சந்தோஷக்குறி குழந்தாய்! இதற்காக நாண மடையாதே. ஒரு கௌரவமான மனிதனுடைய மனைவியாகி அதிதிகளுக்குத் திருப்தி செய்து, அயலார்க்கு இனியளாய் யாவராலும் நன்கு மதிக்கப் பட்டு, ஏழைகளுக்கு உபகாரியாய் வாழ்வதிலும் சிறந்த பேறு இவ்வுலகத்தில் வேறென்னவிருக்கிறது? ஒவ்வொரு கன்னிகையும் இத்தகைய வாழ்வையே விரும்பவேண்டும். இங்குள்ள எல்லாக் கன்னிகைகளுக்கும் அத்தகைய வாழ்வே கிடைக்கவேண்டுமென்று நான் பிரார்த்திக்

கிறேன். சிலர் ஆரம்பத்தில் நயவஞ்சகராகிய வாலிபர்களின் மயக்கில் சிக்கி, அவர்கள் பெரிய செல்வத்தில் தங்களைச் சீமாட்டிகளாக வைத்துக்கொண் டிருப்பார்க ளென்று, அவர்களுடைய வஞ்சக வார்த்தைகளால் மதிமயங்கி, அந்தோ! பின்னல் வாயால் மொழியொண்ணுத இம்சைகளுக்கெல்லாம் ஆளாகி யல்லற் படுகிறுர்கள். சில திருட்டுப் பயல்கள், பெண்கள்கொண்டுவரும் சீதனச்சொத்தை முன்னுடி யறிந்துகொண்டு, அச்சொத்துக்கு ஆசைப்படாதவர்கள் போலவும், தங்கள் வரையில் செல்வமுடையவர்களென்றும் கூறித் தந்திரமாய் அப்பெண்களை மயக்கி மணம் புரிந்து கொண்டபின், அவர்கள்கொண்டுவந்த சீதனத்தை வீண்விரையம்செய்துவிட்டு அவர்களை யம்பலத்தில்விட்டுச் செல்கிறுர்கள். அத்தகைய துர்ப்பாக்கிய தசையில்லாமல் இத்தகைய நாணயமான வாழ்வு கிடைப்பது மிக்க உசிதமன்ருே" என்று மொழிந்து விட்டு இராமாப்பாயை நோக்கி, "ஏன் உன் பெண்களாகிய மரகதமும் கல்யாணியும் போய்க் கேட்கலாமே?" என்ருர்.

இராமாபாய் சீமாட்டிக்கு அது ஒப்பவில்லையாதலின் "அது முடியாதகாரியம்" என்று தலையசைத்தாள். தைரிய நாதர் உற்று நோக்கியபோது அம்மாது "இவ்விஷயம் என்மனதிற்குப் பிடிக்காததால்...." என்ருள். அதற்குள் தைரியநாதர் "போதும் போதும், இன்னும் ஒன்றுமே கூறவேண்டாம். இதில் பலவந்தம் ஒன்றுமில்லை" என்று கூறிவிட்டுத் தமது மூத்த குமாரியை நோக்கி, "ஏன் மீனுள்! நீ எப்படியும் என் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியவள். நீ கேட்கலாமே" என்ருர்.

மீனுள் மிக்க நாணத்தால் கலவரமடைந்தாள். அதைக் கண்ட அவர் "ஏன் இதில் வெட்கப்பட வேண்டிய விஷயம் ஒன்றுமில்லை. மனிதர் வெட்கப்பட வேண்டிய விஷயங்

கள் அனேகம் இருக்கின்றன—அவற்றை வெட்கமின்றிச் செய்து விடுகிருர்கள். இதிலென்ன விருக்கிறது. வா என் கூட; உனக்காக நானே கேட்கிறேன். நான் பைரவி கிருஷ்ணப்பனைப்போல் கவிவாண னல்லாவிடினும் பரவா யில்லை" என்று கூறி மீனுளின் கரத்தைப் பற்றியழைத் துக்கொண்டு போய் நாகம்மாள் இருக்குமிடத்தின் முன் நின்று பின்வருமாறு கேட்டார்:—

"என்மெய் யன்பிற் கேற்றசோ தரிகேள்
மின்னிடை யாள்நம் மீனுள் தானும்
மணமே புரிய மனத்தினில் நினைத்தே
புரிந்தா லுலகில் புருஷ ஞேடு
மருவியே வாழ்ந்து மகிழு வாளோ
என்சிந்தை மகிழ இயம்பிடு வாயே"

இம்மொழிகளைக் கேட்டதே நாகம்மாள் மற்றபேர்க் குக் கூறியதுபோல் உடனே பதில் உரைக்கவில்லை. சற்று நேரம் அவ ளிருக்கு மிடத்திலிருந்து ஒருவித சத்தம் தோன்றியது. அது, உற்றுக் கேட்போர்க்கு நாம் வியா கூலத்தை யுண்டாக்கும் சங்கதியையே கூறப்போகிருேம் என்றுணர்ந்த ஒருவர் நாம் எப்படி யிதைக்கூறுவதென்று விசனப்படுவதுபோல் தோன்றியது. கடைசியில் அவள் பின்வருமாறு விடையளித்தாள்:—

"இவள் தான் கற்புடை ஏந்திழை யாளே
மெல்லி யிவளும் விரும்பிய காதல்
துயர்தரத் தக்கது துன்ப மிவட்குப்
பின்வரு தற்கே பெரியநற் குணங்களும்
கெட்டிருக் கின்றன கேட்டுணர் வீரே"

இந்த மொழிகளைக் கேட்ட தைரியநாதம் பிள்ளை மிக்க மனவருத்த மடைந்தார். அவருடைய முகத்தில் இரத்தம் ஏறியது. அவர் சற்று மனவருத்தத்தோடு, "இது

மரியாதைக்கு அவமரியாதை யெய்வதாகும். நீதவிர வேறு யாரேனும் என் புத்திரியின் பெயரோடு அழிவு என்ற வார்த்தையைச் சேர்த்துக் கூறுவார்களாயின், அவர்கள் இவ்வுலகில் இல்லாமற் போவதே நலமாகும். ஆயினும் பரவாயில்லை; வெளியில் வா. என்னல் ஒரு முட்டாள் தனம். அதாவது உனக்கு இத்தகைய கேளிக்கையான விஷயம் நெடுநேரம் மனதிற்குப் பிடிக்காதென்பதை நான் மறந்து விட்டேன். பரவாயில்லை போதும் வெளியில் வா!'' என்ருர்.

சற்று நேரம் வரையில் ஒரு பதிலுமில்லை. தைரியநாதர் மறுபடி கூறத்தொடங்கி, “ ஓ என் சுற்றத்தாளே ! நான் ஏதோ அவசரப்பட்டுக் கூறிவிட்டாலும் நீ என்மேல் கோபிக்கலாகாது. நான் ஒருவர்மேலும் கோபம்வைப்பதில்லை. அதிலும் உன்மேலா கோபம்வைப்பேன். நீ யப்படி யொரு போதும் நினைக்கலாகாது. வா வெளியில் வா. நாம் இருவரும் நண்பர்களாகக் கைகுலுக்கிக் கொள்வோம். நீ என் கப்பல், விலையுயர்ந்த சாமான்களை யேற்றிவரும் கப்பல், எனக்குத் திரண்ட செல்வத்தைக் கொண்டுவரும் கப்பல், அல்லது என் முதல் தரமான மீன்பிடிக்கும் படகுகள் கடலில் முழுகிப் போய்விடும் என்று கூறினும் எனக்கு அதனல் மனவருத்த முண்டாகாது. ஆனல் என் புத்திரி களாகிய மீனள் அல்லது புனிதத்தைப்பற்றித் துயரமான சங்கதியைக் கேட்பதெனின் என்மனம் தாளாது-ஆயினும் நீ கூறியபடியால் பரவாயில்லை. நீ வெளியில்வா. இருவரும் கைகுலுக்கிக் கொள்வோம். இதோடு உனக்கு என்மேல் கோப மிருந்தாலும் அது ஒழிந்துபோகட்டும்'' என்ருர்.

அப்போதும் கூடாரத்திற் குள்ளிருந்து எவ்விதப் பதிலும் வரவில்லை. தைரியநாதர், நாகம்மாள் தமது மொழிகளால் மிக்க கோபமடைந்து விட்டாள் எனக் கருதி அவளைச் சமாதானப்படுத்தவேண்டுமென்று “சகோ

தரியே ! நான் என் மூத்தபெண்ணுக்கு தீங்குண்டாகும் என்பதைக் கேட்டதே யுண்டான மனவருத்தம் என்னை யாத்திரப்பட்டு இரண்டொரு மொழிகள் கூறிவிடும்படிச் செய்தது. அதற்காக நீ என்னை மன்னிக்கவேண்டும். நான் ஒருபோதும் மனதார உனக்கு வருத்தமுண்டாகும் வார்த்தை யொன்றைக்கூடக் கூறமாட்டேனென்பது உனக்கே நன்ருய்த் தெரியும். ஆகையால் நீ யொன்றையும் மனதில் வையாமல் எழுந்து வெளியில் வந்து என்னேடு சந்தோஷமாய்க் கைகுலுக்கிக்கொள். வா சீக்கிரம்" என்ருர்.

அவர் என்ன வேண்டிக்கொண்டும் நாகம்மாள் வெளியில் வரவுமில்லை அவள் எவ்வித மறுமொழியும் கூறவுமில்லை. அதன்மேல் தைரியநாதர் அக்கூடாரத்தின் முன்னிருந்த திரைக் கதவைத் திறந்து உள்ளே சென்ருர். நாகம்மாள் அங்கில்லை. எப்படியோ மாயமாக மறைந்து விட்டிருந்தாள்.

நாகம்மாள் உள்ளேயில்லையென்று கூறிக்கொண்டே தைரியநாதம் பிள்ளை தேக நடுக்கத்தோடும் பிரமையடைந்த கண்களோடும் வெளியில் வந்ததைக் கண்டதும் அங்கிருந்த அனைவரும் நடுப்பகலில் சந்திரன் உதயமானதைக் கண்டவர்கள் எவ்வாறு வியப்படைவார்களோ அதனினும் அதிகப்பிரமையடைந்தார்கள். ஏனெனில் நாகம்மாள் இருந்தது ஒருவிதமாக தற்சமயம் சருமங்களால் அமைக்கப்பட்ட ஒருவிதக் குடிசை; அது இவர்களனைவருமிருக்கும் அறைக்குள் ஒரு சுவரின் ஓரத்தில் இருக்கிறது. அக்குடிசையின் பின் பக்கம் அறையினுள்ள ஒரு சிறு சாளரமிருக்கிறது. அதில் இரும்புக் கம்பிகள் நாட்டப்பட்டிருக்கின்றன. அக்கம்பிகள் பலமானவை. அவற்றிற்கிடையில் ஒரு பூனை செல்வதே கஷ்டம். மேலும் அந்த அறை அம்மாளிகையின் மூன்ருவது மேல்மாடியி லிருக்கிறது.

இவ்வாறிருப்பதால் நாகம்மாள் அங்கிருந்து செல்வ தாயின் அறையின் உட்பக்கமுள்ள தோல் திரையை நீக்கிக் கொண்டு அறையின் வழியாகத்தான் வெளிச்செல்லவேண் டும். அறையில்தான் கேளிக்கையாகக் குறி கேட்க யாவரும் ஆவலோடு காத்திருக்கிறார்கள். அவர்களில் ஒரு வர் கண்ணுக்குக்கூட புலப்படாமல் அவள் அறையின் வழி யாய்ச் சென்றாள் என்பது சுத்த அசம்பாவிதமான காரி யம். அப்படியிருக்க அவள் எவ்வாறோ போய்விட் டிருக் கிறாள் என்ற வரையில் பிரத்தியட்சமாய்த் தெரிகிறது. அதனால் அங்கிருந்தவர்கள் பிரமிப்படைவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அவர்களில் சிலருக்கு மிக்க பீதியே யுண் டாகி விட்டது.

கடைசியில் தைரியநாதம்பிள்ளை யாவரையும் நோக்கி "நண்பர்களே! என் சுற்றத்தாளாகிய இந்த நாகம்மாளைப் பற்றிய விஷயங்கள் உங்களுக்குப் பெரும்பாலும் தெரிந்தே யிருக்கும். இவளுடைய வழிகளனைத்தும் அபூர்வமானவை. உண்மையிலேயே அவள் மனிதரிடமில்லாத சில அபூர்வ சக்திகளையுடையவளாக விருக்கிறாள் என்பதை நம்மில் பலர் அனுபவமாகக் கண்டேயிருக்கிறோம். ஆயினும் அவள் நடக்கைகள் சற்றும் தீயவெண்ணங்கள் கொண்டவையல்ல. அதிலும் இந்தவிடத்திற்கு அவள் ஒருபோதும் தீங்கு நினைக்கவே மாட்டாள். ஆகையால் நீங்கள் அவள் மாய மாய் இப்படி மறைந்து விட்டதற்காகச் சற்றும் பீதி யடையவேண்டாம். அதனால் கொஞ்சமேனும் கெடுதியுண் டாகுமென்று கருதவேண்டாம். என் சகோதரி எப்படி யேனும் போஜன வேளைக்கு நம்மிடம் வந்து சேருவாள் என்று நான் ஐயமற நினைக்கிறேன்'' என்று உறுதியாகக் கூறினார்.

மற்ற பேரைப்போல் திப்பிரமை யடைந்து இதுகாறும்

வாய்திறக்க முடியாமலிருந்த பாப்பம்மாள், அதாவது எல்லப்பன் தங்கை இராமாபாய் சீமாட்டியை நோக்கி, "சீமாட்டியே நான் உண்மையாகவே உம்மிடம் கூறுகிறேன். இப்படி மாயமாய் வந்து மாயமாய் மறைந்துபோகும் ஆட்களால் ஒருபோதும் நன்மை நடவாது. இவளென்ன திடீலென்று மின்னல்போல் இக்கூட்டத்தின் மத்தியில் வலிய வந்து தோன்றினள். இப்போது தட்டென்று மாயமாய் மறைந்துவிட்டாள். அய்யோ கடவுளே! இத்தகையோரிடமிருந்து நீரே யெங்களைக் காப்பாற்றவேண்டும்" என்றாள்.

இராமாபாய் சீமாட்டி:—"மெதுவாய்ப் பேசு, மெதுவாய்ப் பேசு! அந்த மாயவித்தைக்காரி தான் மாயமாய் மறைந்ததோடு வீட்டின் ஓர் பாகத்தையும் கொண்டு போகாமல் விட்டு விட்டுச் சென்றாளே, அதற்காக நாம் வந்தனமளிக்கவேண்டும். இப்படிப்பட்ட ஆசாமிகள் எவ்வளவோ கெடுதிகளை யுண்டாக்கியிருக்கிறார்கள்" என்றாள்.

ஏறக்குறைய இவ்வாறே அங்கிருந்தவர்களில் பலபேர் குசுகுசுவென்று ஒருவரோடொருவர் பேசிக் கொண்டார்கள். கடைசியில் தைரியநாதம்பிள்ளை அதிகாரத் தோரணையான தொனியாய் "சரி சரி! இம்மாதிரி அற்பவழியில் சம்பாஷணை செய்வதற்கு இதுவல்ல சமயம்; எல்லோரும் புறப்படுங்கள். ஆழ்கடலிற் சென்று மீன் வேட்டையாட வேளை வந்துவிட்டது. படகுகளெல்லாம் துறைமுகத்தில் காத்துக்கொண் டிருக்கின்றன. காலையிலிருந்து இதுவரை காற்று மேல் நோக்கி மும்முரமாகவேயிருந்தது. ஆனால் இப்போது மிக்க அனுகூலமான மாதிரியாய் வீசிக்கொண் டிருக்கிறது. ஆகையால் படகுகளெல்லாம் உடனே புறப்

படுவதற்கு இதுதான் மிக்க அனுகூலமான சமயம்'' என்றார்.

மெய்யாகவே காற்று அனுகூலமாக மாறியிருந்தாலும் நாகம்மாள் மறைந்து போனது அனைவர்க்கும் ஒரு அவசகுனமாகத்தோன்றியதால் ஒருவரைப் பார்த்தொருவர் மர்மமாய்த் தலையசைத்துக் கொண்டார்கள். ஆயினும் தலைவன் கட்டளையை மறுக்க முடியாதவர்களாய் யாவரும் ஆயத்தமாகிக் கடற்கரையை நோக்கிப் புறப்பட்டார்கள்.

---

## 32-வது அத்தியாயம்

அத்திவாருக்கு வருடத்திலிருமுறை மீன் பிடிப்பது ஒரு பெரிய கொண்டாட்டம். அது சாதாரண விவசாயிகளுக்கு அறுவடைக்காலம் போன்றது. ஏனெனில் அந்தச் சமயங்களில் மீன் பிடிப்பதே அவர்களுடைய ஜீவன் வருவாயான தொழில். அக்காலத்தில் அவர்கள் கடற்கரையில் சென்று குடிசைகளை யமைத்துக்கொண்டு குடும்பத்தோடு தங்கி விடுவார்கள். அங்கிருந்து ஆடவர்கள் படகில் ஆழ்கடலிற் சென்று மீன் பிடித்து வருவார்கள்.

அவ்வாறு செல்லும்போது மாதர்கள் அவர்களுக்கு மூன்று நான்கு தினங்கட்குப் போதுமான ஆகாரம் அவர்களிடம் கொடுத்தனுப்புவார்கள். ஏனெனில் அவர்கள் கடலில் நெடுந்தூரம் செல்வதால் திரும்பிவர இரண்டு மூன்று நாட்கள்கூடச் செல்லும். ஆடவர் மீன்களைப் பிடித்து வந்து கரையில் சேர்த்துவிட்டு மறுபடி செல்வார்கள். வீட்டிலுள்ள பெண்டுகள் முதலியோர் உண்பது போக மற்ற மச்சங்களை யுலர்த்திப் பதன் செய்வார்கள்.

அவைகள் பிறகு விற்கப்படும். இதனால் இத்தொழில் அவர்களுக்குக் குடியானவனது அறுவடைக்காலம் போன்றது.

இவ்வாறு இந்த ஆடவர் படகுகளில் ஏறி மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்றபோது, அவர்கள் திரும்பி வருமட்டும் அப் பெண்பாலார் தங்கள் இஷ்டதெய்வங்களைப் பிரார்த்தித்துக்கொண்டு மிக்க கலக்கத்தோடு கடலை நோக்கிய வண்ணமாகவிருப்பார்கள். ஏனெனில் அவ்வாறு மீன் பிடிக்கச் செல்வோர்க்குப் பலவித ஆபத்துகளுண்டு. எப்படியெனில் இவர்கள் படகில் ஏறி அகன்ற அலைகடலில் செல்கிறார்கள். கரையை விட்டுப் பத்து முதல் நூறு மைல் தூரம் வரையில் செல்வார்கள். கரைக்குத் தூரத்தில் சுறு முதலிய பெரிய மச்சங்கள் இருக்கும். அவை மனிதனைத் தின்பவை. மீன் பிடிக்கும் படகுகளில் ஒவ்வொரு படகிலும் நான் கைந்து பேர்களே யிருப்பார்கள். இவர்களில் இருவர் படகைச் செலுத்துவதில் கவனம் வைப்பார்கள்; இருவர் வலை வீசுவதும் மீன்கள் அகப்பட்டதும் அவற்றை யிழுத்துப் படகில் சேர்ப்பதுமாகிய வேலைகளைச் செய்வார்கள். ஒருவன் ஏதேனும் பெரிய மீன் அருகில் வருகிறதாவென்பதைக் கவனித்துக்கொண் டிருப்பான். ஏனெனில், சுறு மீன் படகின் அருகில் மறைவாக வந்து படகில் இருக்கும் மனிதர்களில் எவனுடைய கால் முதலிய அவயவங்களில் ஏதேனும் படகோரத்திலிருந்தால் ஒரு பாய்ச்சலாகப் பாய்ந்து அதைப்பற்றி அம்மனிதனை நீருக்குள் இழுத்துக் கொண்டு போய்விடும். ஆகையால் அத்தகைய ஆபத்து நேராவண்ணம் ஒருவன் சதா காவலிருந்து அப்போதைக்கப்போது எச்சரிக்கை செய்யவேண்டும். தூரச்செல்லும்

படகிற்கு இக்காவலர் ஒருவன் மாறி யொருவனிருக்க ஒவ்வொரு படகிற்கும் இரண்டு பேர் வேண்டும்.

இந்த ஆபத்தன்றியில் சில சமயங்களில் ஒவ்வொரு படகு வழி யறியாமற் போய்விடுவதுண்டு. அவர்களிடம் திசையறிகருவி கிடையாது. ஆகாரமோ இரண்டு மூன்று நாட்களுக்குமட்டுமே யிருக்கும். அத்தகைய சமயத்தில் திசைதப்பித் தவறான மார்க்கமாய் உட்கடலில் போய்விட்டால் ஆகாரமின்றி மடியவேண்டியதே. இப்படி நேர்வதுமுண்டு.

இதன்றி இவர்கள் ஆழ்கடலில் சென்றிருக்கும்போது திடீலென்று புயற்காற்று முதலிய ஆபத்து நேரிடும். அத்தகைய ஆபத்தில் பிரம்மாண்டமான கப்பல்களே முழுகிவிடுமென்றால் இந்த மீன் பிடிக்கும் படகுகள் எம்மாத்திரம். இக்காரணங்களால் கடலுக்குச் சென்ற மீன்பிடிக்கும் படகுகளில் சில திரும்பி வராமலே போவதுமுண்டு. ஆகையால் ஆழ்கடலில் மீன்பிடிக்கச்சென்ற தம் ஆடவர்கள் திரும்பிவரும்வரையில் அப்பரிதாபமான மாதர்களுக்கு மனதில் பெருந் திகில் நிறைந்திருக்கும்.

அன்றையதினம் இத்தகைய ஆழ்கடல் மீன் வேட்டைக்காக யாவரும் கடலோரம் போய்க் குழுமினார்கள். அனேகம் குடிசைகள் ஆயத்தமாக அமைக்கப்பட்டிருந்தன. ஏறக்குறைய முப்பது படகுகள் ஆயத்தமாகப் புறப்படவிருந்தன. ஒவ்வொரு படகிற்கும் ஐந்து அல்லது ஆறு பேர் இருந்தார்கள். அவரவர்களின் குடும்பத்தினரும் அங்கு வந்திருந்தார்கள். ஆச்சு எல்லாம் ஆயத்தமாய்விட்டன. மாதர்களும் மக்களும் தம் கணவரையும் சகோதரரையும் தந்தையரையும் அனுப்பக் கண்கலக்கத்தோடு நிற்கிறார்கள்.

அச்சமயம் தைரியநாதம்பிள்ளை யவரவரிடம் சென்று

யாவரும் போதுமான ஆகாரம் முதலியவை யெடுத்துச் செல்கிருர்களா வென்று விசாரித்தார். அவரவர் மீன் பிடிக்கும் கருவிகளையும் தற்காப்பிற்காக ஆயுதங்களையும் கொண்டுபோகிருர்களாவென்றும் கவனித்தார். அவை மட்டுமல்ல அவர்கள் எல்லோரும் போதுமான ஆகாரம், சாராயம் முதலிய யாவும் கொண்டுபோகிருர்களாவென்று கவனித்துப்பார்த்து, "அட முட்டாளே! உன் படகில் சாராயமில்லையே; இந்தச் சீட்டைக் கொண்டுபோய்க் காட்டி நமது வீட்டுச் சாமான் கிடங்கிலிருந்து இரண்டு கலன்கள் ஜின் சாராயம் வாங்கிக்கொள். அடடா! நீ என்ன போதுமான ஆகாரம் சேகரிக்கவில்லையே; இந்தா இச் சீட்டைக்காட்டி உங்கள் ஆறுபேருக்கும் இன்னும் இரண்டு நாட்களுக்குப் போதுமான பதனிட்ட உணவுப் பொருள்களை வாங்கிக்கொள். அடே! உனக்கு இந்த வலை போதுமா? கிடங்கிலிருந்து இன்னும் இரண்டு வலையும் ஒரு சுருக்குத்தும் ஈட்டியும் வாங்கிச் செல்" என்று இம்மாதிரி அவரவர்களுக்குத் தம்மாலான உதவி செய்தார்.

அவருடைய உதாரகுணத்தைக் கேட்டவர்கள் அனைவரும் சந்தோஷத்தோடு அவருக்கு வந்தனமளித்து வாழ்த்தினுர்கள். ஆனுல் மாதர்களோ ஆரவாரத்தோடு அவரைப் புகழ்ந்து துதித்தார்கள். தைரியநாதரோ "சட் எல்லா மாதர்களும் வஞ்ச நெஞ்சமுடையவர்கள்" என்று வார்த்தையால் அவர்களுடைய கூக்குரலை யடக்கி விடுவது அவருக்கெப்போதும் வழக்கம்.

கடைசியில் படகுகளனைத்தும் புறப்பட ஆயத்தமாய் விட்டன. பாய்மரங்கள் விரிக்கப்பட்டன. படகுகளைச் செலுத்தலாம் என்ற சமிக்கை கொடுக்கப்பட்டது. உடனே எல்லாப் படகுகளும் வேட்டை கிடைக்கும் இடத்திற்கு இருட்டாவதற்குள் போய்ச் சேரவேண்டுமென்று துரித

மாகச் செல்லத் தொடங்கின. அவர்களனைவரும் புறப்பட்டதும் தாங்கள் வழக்கமாகப் பாடும் ஒருவித பாட்டைப் பாடிக்கொண்டே சென்றூர்கள்.

கடலிற் செல்லும் படகோட்டிகளின் பாட்டுகள் நெடுநேரம் கரையிலிருப்பவர்களுக்குக் கேட்டது. அதிலும் அன்பார்ந்த மனைவிகளுக்கு அவரவர்களின் கணவர் குரல் கேட்டது. வரவரச் சத்தமும் குறைந்தது. படகுகளும் சிறு சிறு உருவங்களாகிக் கடைசியில் தூரத்தில் காணப்படும் சிறு கருப்புப் புள்ளிகள்போல் தோன்றின. மாதர்கள் அதுகாறும் ஏக்கத்தோடு தம் கணவரும் புத்திரரும் சகோதரரும் சுற்றத்தாரும் செல்லும் படகுகளைப் பார்த்துக்கொண்டிருந்து விட்டுக் கடைசியில் சோர்ந்த முகத்தோடு தத்தமது குடிசையை நோக்கி நடந்தார்கள். இனி தங்கள் ஆடவர்கள் கொண்டுவரும் மச்சங்களைப் பதனிட்டுலர்த்தவேண்டியதற்கு அவசியமான காரியங்களை ஆயத்தம் செய்யவேண்டியதே யவர்கள் வேலை. அவற்றைச் செய்துவிட்டுத் தங்கள் ஆட்கள் ஏராளமான மச்சங்களோடு திரும்பி வருவார்களென்று மிக்க அவாவோடும் அம் மாதர்கள் காத்துக்கொண்டிருப்பார்கள். பாபம் அவர்கள் ஒவ்வொரு சமயம் தங்கள் ஆடவரையே பறிகொடுத்துப் பரிதபிக்க நேர்வதுமுண்டு. ஆண்டவன் எண்ணத்தை யாரே யறியவல்லார்! அவர்கள் வழக்கம்போல் தங்கள் தங்கள் ஆடவர்கள் க்ஷேமமாய் நல்ல வேட்டையோடு திரும்பி வரவேண்டுமென்று தங்கள் தெய்வங்களுக்குப் பிரார்த்தனை செய்துகொண்டார்கள். ஆனல் இச் சமயம் அம் மாதர்கள் பிச்சிமலை நாகம்மாள் வசந்தமாளிகையினின்றும் மனவருத்தத்தோடு போய்விட்டாளென்ற சங்கதி எங்கும் பரவிவிட்டதை யறிந்தபடியால் மிக்க கலக்கமடைந்தார்கள். அதனல் அவர்களுக்குள் மிக்க மன

வருத்தமுண்டாயிற்று. "அந்தோ கடவுளே! மற்ற நாட்களைவிட இன்று, ஆழ்கடலில் வருடமொருமுறை வேட்டைக்குச் செல்லும் தினத்தன்றுதானு நாகம்மாளுக்கு மன வருத்தமுண்டாகச் செய்யவேண்டும்" என்று யாவரும் திகிலோடு பேசிக்கொண்டார்கள்.

கடற்கரையில் கூடியிருந்த ஜனங்களெல்லாம், மீன் பிடிக்கச் செல்லும் படகுகளனைத்தும் கண்ணுக்கு மறைந்த பின், தங்கள் தங்கள் பிரியப்படி உலவிக்கொண்டிருந்தபின் தங்கள் வாசஸ்தலத்தை நோக்கிச் சென்றார்கள்.

கடற்கரையில் ஒரு தனியான ஜனசஞ்சாரமற்ற விடத்தில் பாறைகளின் ஆழ்ந்த சந்தில் ஒரு வழியில் மீனுளும் குலசேகரனும் உலவிக்கொண்டு செல்கிறார்கள். யாவரும் இங்கு வரமாட்டார்களாதலால் நாம் நிம்மதியாய் உலவலாம் சம்பாஷிக்கலாம் என்று கருதியே யவர்கள் அங்கு சென்றார்கள். அந்த விடம் படகுகள் செல்வதற்காவது கரை சேர்வதற்காவது தகுதியான விடமல்ல. சாதாரணமாகக் கடற்கரையில் உலவ வருவோரும் அங்கு செல்வதில்லை. ஏனெனில் அங்கு கடல் தேவதைகள் முதலியவை நடமாடுவதுண்டு என்ற வதந்தி யுலவுவது வழக்கம். ஆகையால் இங்கு நிம்மதியாய்ப் பேசலாமென்று கருதியே காதலர் இருவரும் உலவவந்தார்கள். அங்கு ஒரு பாறையின் கீழ் பால்போன்ற வெண்மணல் நிறைந்தவிடம் உலவுவதற்கு உலர்ந்து வசதியாக விருந்தது. அப்பாதைக் கடல் ஓரம்வரையில் சென்றிருந்தது. அங்கு ஒரு பாறையின்கீழ் ஒரு அகன்ற குகையிருந்தது. அக்குகைக்கு ஒன்றின்பக்கலொன்ருக இரண்டு பாதைகள் இருந்தன. அவை இயற்கையாய்ப் பாறையிலேயே யமைக்கப்பட்டவை. அங்குள்ள ஜனங்கள் அவைகள் நாசிக்குள்ள இரண்டு துவாரங்கள் போலிருப்பதால் முனி மூக்கு என்று அதற்குப் பெயரிட்

டார்கள். இந்த இடத்தில்தான் காதலரிருவரும் உலவிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் முன்பே பன்முறை யங்கு இரகசியமாகச் சந்தித்திருக்கிறார்கள். இப்போது அவர்கள் சம்பாஷணை அவர்கள் மனதை யக்காட்சியிலிரு ந்து வெளிக்குக் கொண்டுபோகக்கூடியதா யிருந்தது.

மீனாள்:—"இந்த வாலிபனைப்பற்றி நீ வெறுப்பும், வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் விருப்பமும் வெளியிட்டாய். உன் வெறுப்பு தகுதியானதல்ல. வஞ்சமோ அநீத மும் முட்டாள்தனமுமானது. இதை நீ மறுதலிக்க முடியாது" என்றாள்.

குலசேகரன்:—"நேற்று நான் அவன் உயிரைக் காப்பாற் றியது என்னை யத்தகைய குற்றத்தினின்றும் விடுவித் துவிடுமென்று நான் எண்ணியிருக்கவேண்டும். என் ஆபத்தைப்பற்றி நான் கூறவில்லை. ஏனெனில் நான் ஆபத்துகளிலேயே என் வாழ்நாட்களைக் கழித்திருக் கிறேன். ஆபத்தின் முன் நிற்பது எனக்கு விருப் பம். ஆயினும் ஒவ்வொருவரும் ஒருவரைக் காப் பாற்ற அத்தகைய பயங்கரமான பிராணியின் முன் சென்றிருக்கமாட்டார்கள்" என்றான்.

மீனாள்:—"அது உண்மையே. எல்லாருமே அத்தகைய சமயத்தில் இன்னொருவர்க்கு உதவிசெய்ய முன் வர மாட்டார்கள். ஆனால் சீவகாருண்யமும் தைரியமு முடைய ஒவ்வொருவரும், உதார குணத்தோடு அச் சமயத்தில் உதவிசெய்ய முன் வருவார்கள் என்பதிற் சந்தேகமில்லை. என் வயோதிகனாகிய பைரவி கிருஷ் ணப்பனே அவனுடைய தைரியத்திற்குச் சமதையான தேகபலமும் இருந்திருந்தால் நீ செய்த காரியத்தைச் செய்திருப்பான். என் தந்தைக்கு அவ்வாலிபன் மேல் அவன் கூறிய வார்த்தைகளுக்காக மனஸ்தாப

மிருந்தாலும், பலமிருந்தால் அவரே அந்தக் காரியத்தைச் செய்திருப்பார். ஆகையால் என் நண்பரே! நீர் செய்த அவ்வுதவியைப்பற்றி அப்படி யதிகமாகப் பெருமை பாராட்டிக்கொள்ளவேண்டாம். நீர் உன் உயிருக்குத் துணிந்து முருகப்பனுக்கு உதவி செய்தாலும் உமக்கு அவன் விஷயத்தில் விருப்பமில்லையென்று எனக்கு நன்ருகத் தெரியும்'' என்ருள்.

குலசேரன்:—''நான் உலகத்தில் உன் காதலையே யாவற்றினும் சிறந்ததாக வெண்ணியிருக்கிறேன். ஊரிலுள்ள பிரஸ்தாபத்தால் பட்சிகளைப் பிடிக்கும் இப்பயல் எனக்குப் போட்டியாயிருக்கிருனென்று தெரிந்தால் என் மனம் படும் வேதனைக்குப் பரிகாரம் ஒன்றுமில்லையோ?'' என்ருன்.

அவன் கூறிய மொழிகளின் மாதிரி கேட்போர்க்கு இரக்கத்தை யுண்டாக்கக்கூடிய விதமாக விருந்தது. அத்தகைய நயமான மொழிகளைப் பேசுவதில் அவன் மிக்க சாமார்த்தியன். எப்போதும் களங்கமற்ற கன்னியரை மயக்குவது தந்திரசாலிகளான ஆடவர்க்கு மிக்க எளிதே. ஆயினும் இச்சந்தர்ப்பத்தில் மீனுள் அவன் மொழிகளால் திருப்தி யடையவில்லை.

ஆகயால் அவள் குலசேகரனை நோக்கி, “நீ பயப்பட வேண்டிய காரணம் ஒன்றுமேயில்லையென்று நீ சீக்கிரம் அறிந்துகொண் டிருப்பாய். இந்த முருகப்பன் அல்லது வேறெந்த வாலிபனுடைய போட்டியாலாவது என்னைப் பற்றிய விஷயத்தில் அஞ்சவேண்டுவதில்லையென்று நீ நன்கறிவாய். ஆகையால் நீ இம்முருகப்பனேடு விரோதபாவமின்றியே நட்பாகவே, அல்லது குறைந்தது அவனேடு சச்சரவு வுண்டாக்கிக் கொள்ளாமல் நடந்து கொள்வாய் என்று நம்புகிறேன். அப்படிச் செய்தால் நீ என் அன்

பிற்கு நன்றி காட்டியதாக நான் கருதுவேன்'' என்று மொழிந்தாள்.

குலசேகரன்:—"ஓ மீனு! நாங்களிருவரும் சினேகராக விருப்பதென்னமோ ஆகாத காரியம். நான் உன் மேல் வைத்திருக்கும் இணையற்ற அளவிடற்கரிய அன்புகூட அதைச் செய்ய முடியாது'' என்றான்.

மீனுள்:—"ஏன் முடியாது? உங்களுக்குள் கொடிய விரோத மான விஷயம் ஏதும் நடைபெறவில்லையே. ஒருவருக் கொருவர் உதவி செய்து கொண்டீர்கள். அவ்வளவே. நீங்கள் ஏன் சினேகராக விருக்கலாகாது. அவ்வா றிருக்கவேண்டுமென்பதற்கு எனக்குப் பல காரணங் களிருக்கின்றன'' என்றாள்.

குல:—அப்படியாயின் அவன் உன் தங்கையைப்பற்றியும் உன் குடும்பத்தைப்பற்றியும் இழிவாய்ப் பேசியதை யலட்சியம் செய்து விட்டாயோ?

மீனுள்:—நான் யாவற்றையும் மன்னித்து விடுவேன். ஒரு குற்றமும் செய்யப்படாத நீ அவ்வளவு செய்யக் கூடாதா?

குலசேகரன் சற்றுநேரம் தலை நாணிப் பேசாமலிருந் தான். அதன் பிறகு தலை நிமிர்ந்து "ஓ மீனுள்! நான் என் மனம் முடியாத காரியம் என்று கூறுவதைச் செய்வே னென்று வாக்களித்து உன்னைச் சுலபமாய் ஏமாற்றி விடு வேன். ஏமாற்றிவிடக்கூடும். அதனுல் நான் அன்னிய ரிடம் அம்மாதிரி அதிமாகச்செய்ய பலவந்தப்படுத்தப்படு கிறதுண்டு. உன் விஷயத்திலோ நான் அப்படிச் செய்ய மாட்டேன். நான் அந்த வாலிபனேடு சினேகனுயிருக்க முடியாது. எங்களிருவர்க்கும் இயற்கையாகவே ஒருவித பரஸ்பர வெறுப்பிருக்கிறது. எங்களுடைய இயற்கை யான குணங்களில் ஏதோ வித்தியாசமிருக்கிறது. அது

ஒருவரையொருவர் வெறுக்கச் செய்கிறது. இதைத் தடுக்க ஒருவராலும் முடியாது. நீ வேண்டுமாயின் என்னைப்பற்றி யவனிடம் பேசிப்பார். அவன் நான் கூறிய இம்மாதிரியே கூறுவான். அவன் எனக்கு முதலிற் செய்த சகாயம் என் மனதிற்கு ஒரு பெரிய வேதனையாயிருந்தது. ஆனால் நான் அதற்குப்பதில் செய்துவிட்டேன்" என்றான்.

மீனாள்:—நீ எப்போதும் ஒரு இருப்பு முகமூடியை யணிந்திருப்பதாய்க் கூறுவதுண்டு. நீ யதை யெடுத்து விட்டாலும் உன்மனம் மட்டும் அதன் வாசனையை விடாமலே அதற்குரிய கடின சித்தத்தை யுடையதாகவே யிருக்கிறது போலும்.

குலசேகரன்:—"மீனா! நீ என் விஷயத்தில் அநீதியாய்க் கருதுகிறாய். நான் என் மனோபாவத்தைச் சற்றேனும் ஒளிக்காமல் உன்னிடம் வெளியிட்டதால் நீ என்மேல் கோபம் கொள்கிறாய். நான் இப்போது மனம்விட்டு உண்மையாகவே கூறுகிறேன். நான் அவனுடைய சினேகனாக விருப்பதென்பது முடியாத காரியம். நான் அவனுக்கு விரோதியா யாவதும் அல்லாததும் அவனைப் பொறுத்ததே. என் குற்றமாக அது இராது. நான் அவனுக்குத் தீங்குசெய்யக் கருத மாட்டேன். ஆனால் அவனை நேசிக்கும்படி மட்டும் எனக்கு நீ கூறவேண்டாம். இதுவே நான் கோருவது. நான் அவனை நேசிக்க முயன்றாலும் அது பலிக்காது. ஏனெனில் நான் அவனிடம் சினேகம் பாராட்ட முயன்றால் அதனாலேயே யவனுக்கு என்மேல் பலவிதச் சந்தேகங்க ளுண்டாகி அதுவே விரோதத்தை யுண்டாக்குவதற்கு முதற்றரமான காரணமாகிவிடும். விவகாரம் இப்படி யிருப்பதால் நாங்கள் இருவரும் எங்கள் இயற்கை யுணர்ச்சியின்படி செல்

லுமாறு விட்டுவிடு. அதனால் நாங்கள் இருவரும் தூரத்திலேயே யிருந்து விடுவோம். இது உனக்குத் திருப்திதானே?" என்றான்.

மீனாள்:—"நீ வேறுவழி யில்லையென்று கூறுகிறவரையில் நான் திருப்தியடைய வேண்டியதே, இப்போது நான் ஒன்று கேட்கிறேன் கூறு. உன் கூட்டாளி கப்பல் வந்தது என்று கேள்விப்பட்டதே நீ ஏன் அப்படி கலவரமாய் நோக்கினாய்? ஏனெனில் அது உன் கூட்டாளிக் கப்பல் தான் என்பதில் எனக்குச் சந்தேகமேயில்லை. குறுக்குத் தீவிலிருக்கும் அக்கப்பல் உன்னுடைய தாகவே யிருக்கவேண்டும்" என்றாள்.

குலசேகரன்:-"அக்கப்பல் அதன் ஆட்களோடுவந்தது என் ஆவலான கோரிக்கைகளுக்கு இடையூறுகுமென்று அஞ்சுகின்றேன். நான் உன் தந்தையின் நட்பில் கொஞ்சம் விர்த்தியடைந் திருக்கிறேன். போகப் போக, இன்னும் அது விர்த்தியடையும். இச்சமயத்தில் நான் எதிர் பார்த்ததை யடியோடு அழிக்க இந்த அச்சுதனும் மற்றவர்களும் இங்குவந்து சேர்ந்தார்கள். நான் அவர்களிடமிருந்து எம்மாதிரி பிரிந்தேன் என்று உனக்குக் கூறியிருக்கிறேன். அச்சமயம் நான் அவர்கள் கப்பலைவிட மிக்க தைரியமும் பலமுமுடைய கப்பலை நடத்திக்கொண் டிருந்தேன். அதிலிருந்த ஆட்கள் அரக்கர்களே தங்கள் கொடிய ஆயுதங்களோடு வந்தாலும் அஞ்சாது எதிர்த்துப் போர்செய்யக் கூடியவர்கள். இப்போதோ நான் ஒரு உதவியுமின்றித் தனியாக விருக்கிறேன். அவர்களை யடக்கவாவது, அச்சப்படச் செய்யவாவது முடியாதவனாக விருக்கிறேன். இப்போதவர்கள் தங்களின் பூரண அகங்காரத்தை வெளியிட அஞ்சமாட்டார்கள். இதனால் அவர்களுக்கும் எனக்கும் கெடுதியாகவே முடியும்" என்றான்.

## 33-வது அத்தியாயம்.

மீனுள்:—"நீ பயப்படவேண்டாம். என் தந்தை அன்னியர் செய்த குற்றத்திற்காக உன்மேல் அநீதமாகக் கோபங்கொள்ளமாட்டார்" என்றுள்.

குலசேகரன்:—ஆயினும் என் குறைகளைப்பற்றி அவர் என்ன கூறுவார்?

மீனுள்:—என் தந்தை இந்தத்தீவார். அவர் அன்னியரால் கசக்கப்பட்டவர்; ஆகையால் அன்னிய நாட்டார்களோடு நீ எதிர்த்துப் போராடியதற்காக அவர் ஒருபோதும் உன் நடக்கையைக் கெட்டதாகக் கருதமாட்டார். அவருடைய முன்னேர்கள் இக்கடல்களிலேயே தங்கள் அதிகாரத்தைச் செலுத்தியிருக்கிருர்கள்.

குலசேகரன்:—"அப்படி யிருந்தாலும் பூர்வீகக் கடலரசரின் சந்ததியில் உதித்த ஒருவர் இக்காலத்திலுள்ள சாதாரணமான ஒரு மானுடனைத் தமக்குச் சமமான அறிமுகமானவனுக ஒப்புக்கொள்ளமாட்டார்கள். நான் இந்திரப்புரி இராஜ்ஜியத்தின் சட்டங்களுக்கு அஞ்சவேண்டியிருக்கிறது என்பதை ஒளிக்காமல் உன்னிடம் கூறியிருக்கிறேன். உன் தந்தை வரிகொடுப்பது முதலிய விவகாரங்களில் மாறுன அபிப்பிராயமுடையவராக விருந்தாலும் எல்லா விஷயங்களிலும் ஒப்புக்கொள்வார் என்று நினைக்கலாகுமோ" என்றுன்.

மீனுள் :—"நீ யப்படி நினைக்கவேண்டாம். என் தந்தை இந்த மலைநாட்டாரின் அக்கிரமச் செயல்களால் மிக்க கஷ்டப்படுகிருர். அவர் சீக்கிரத்தில் அவர்களின் அநீதத்தை யடக்கக் கிளம்புவாரென்றே நான் நினைக்கிறேன். அவருடைய எதிரிகள் இப்போது தங்க

ளுக்குள்ளாகவே பிளவுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்குள் பல கட்சிபேதங்களுண்டாகிவிட்டிருக்கின்றன. ஆகையால் நம் தீவார் இழந்துவிட்டத் தங்கள் சுயாதீனத்தைக் கைப்பற்றுவதற்கு இதுவே சரியான சமயம்'' என்றாள்.

குலசேகரன்:—ஆம் இத்தீவின் கோட்டைமேல் 1-வது தைரியநாதம் பிரபு என்று கொடி நாட்ட இதுவே சமயம்.

மீனாள் :—ஏன் ? 7-வது தைரியநாதம் பிள்ளை-இதற்குமுன் அவர் முன்னோரில் அறுவர் அப்பட்டத்தை யனுபவித்திருக்கின்றனர். நான் கூறுவது உனக்கு நகைப்பாகவிருக்கிறதுபோலும். இதைத் தடுக்கக்கூடியது என்ன விருக்கின்றதென நீ நினைக்கிறாய் ?

குலசேகரன்:—அதைத் தடுக்கத்தக்கது ஒன்றுமேயில்லை. ஏனெனில் அம்முயற்சி செய்யப்படப்போகிறதேயில்லை. ஒரு இந்திரபுரி பீரங்கிப் படகின் நீளமான எப்படகும் அதைத் தடுத்துவிடக்கூடும்.

மீனாள்:—நீ எங்களைப்பற்றி அலட்சியமாய்ப் பேசுகிறாய். ஆயினும் துணிகரமான கொஞ்சம் ஆட்கள் ஒன்று சேர்ந்தாலும் என்ன செயயக்கூடும் என்பது உனக்கே தெரியும்.

குலசேகரன் :—ஆனால் அந்தத் துணிகரமான ஆட்கள் ஆயுதபாணிகளாக விருக்கவேண்டும். அதோடு ஒவ்வொரு முறையும் தங்கள் உயிருக்குத் துணிந்து வெளிவருகிறவர்களாக விருக்கவேண்டும். உன் தந்தையின் பக்கத்தில் சேரக்கூடிய நாடுகளெல்லாம் ஒரு வழியில்லாவிடின் ஒரு வழியில் பலகீனமடைந்திருக்கின்றன. இவைகளெல்லாம் ஒன்றுசேர்ந்தாலும் இந்திரபுரியின் ஒரு பீரங்கிப் படகிற்கு முன்

நிற்கமுடியாது. உன் ஆட்கள் தங்கள் மூதாதைகள் போல் தைரியசாலிகளாயினும் தக்க ஆயுதமில்லாதவர்கள் என்ன செய்யமுடியும்? ஆகையால் நீ சிந்திப்பது வீண் கனவே. உன் கண்களில் தீட்சணியமான பிரகாசமுண்டாயினும் நான் அவ்வாறே கூறவேண்டும்.

மீனாள் தலைகுனிந்து, "ஆம்; அது உண்மையாகக் கனவே. இக் குடும்பத்தில் பிறந்தவள் ஒரு சுயாதீனமுடைய குடும்பத்தில் பிறந்தவளாக எண்ணி நடப்பது தகுதியல்ல. எங்கள் கண்கள் பூமியை நோக்கியபடியும், எங்கள் காலடி மெதுவாகவும் அச்சத்தோடுகூடியதாகவும், ஒரு அடிமையின் செய்கைகள்போ லிருக்கவேண்டும்" என்றாள்.

குலசேகரன்:-"ஏன் வேறு இடங்கள் இருக்கின்றன. அங்கு பூரண சுயாதீனத்தோடு உன்னதமான கமுகு, தென்னை, பலா முதலிய விருக்ஷங்களடர்ந்த இரமணிகரமான தோட்டத்தில் சற்றும் களங்கமின்றி உலவலாம். அங்கு ஒருவரையொருவர் அடக்குவதென்பது கிடையாது. அப்படி யிருந்தாலும் அதிக பலமுடையோர் குறைந்த பலமுடையோரையும் வனப்புடைய மாதர் அனைவரையும் அடக்கியாளலாம். அங்கு மாதர்களின் கால்கள் மலர்கள் புட்பித்திருக்கும் மிருதுவான புற்றரையில்தான் நடக்கும். அங்குள்ள வேலிகளிலெல்லாம் நறுமணம் வீசும் மலர்ச் செடிகள் நிறைந்திருக்கும்" என்றான்.

அம்மொழிகளைக்கேட்ட மீனாள் சற்றுநேரம் ஒன்றும் கூறாமல் பேசாமலிருந்தாள். அதன்பின் ஏதோ சிந்தனையிலிருந்து வெளிவந்தவள் போல குலசேகரனை நோக்கி, "இல்லையில்லை, நீ நினைக்கிறபடி என் ஜன்மபூமி மிக்க வனப்

பற்றதாயினும், முரட்டுத்தேச மாயினும், மிக்க தாழ்மைப் படுத்தப்பட்ட நிலைமையி லிருந்தாலும், உலகிலுள்ள மற்ற எல்லா நாடுகளை விடவும் இதுவே எனக்குச் சிரேட்டமானது. நீ கூறும் அத்தகைய விருட்சங்களை யுடைய தோட்டங்கள் முதலியவற்றை என் மனதாற் காண எவ்வளவு முயன்றாலும் பாறைகளுக் கிடையில் பயங்கரமான அலைகளை வீசும் இத்தீவிற்கு இணையாக எனக்கு எதுவும் தோன்றவில்லை. பெற்றதாய் குரூபியாய், அழகற்றவளாய். செல்வ மில்லாதவளாய் இருப்பினும் அவளுக்குச் சமதையாய் அல்லது மேலானவளாய் வேறெந்த மாதையேனும் கருத மனம் நாடுமோ. அப்படி நாடின் அத்தகைய புத்திரன் அல்லது புத்திரி மாதுர் துரோகியாகவல்லவோ மதிக்கப் படுவார்கள். இந்தநாட்டில் கொடிய புயற்காற்று அடிக்கடி வீசுவதாயினும் இதன் கடலோரத்திலுள்ள பாறைகளில் அனேகம் கப்பல்கள் வருடாவருடம் மோதுண்டழிவதாயினும், இது எத்தகைய கொடிய சீதோஷ்ண ஸ்திதியையுடையதாயினும் என் தந்தையின் மூதாதைகள் பிறந்து வாழ்ந்து மடிந்தது இந்த விடத்திலேயே. இதன் குணங்களையெல்லாம் அவர்கள் நல்லனவாகவே சகித்துக் கொண்டிருந்தார்கள். என் தந்தையும் வாழ்வது இங்கேயே. நானும் இங்கேயே வாழ்ந்து மடிவேன்'' என்றாள்.

குல:—''அப்படியாயின் நானும் இங்கேயே வசித்திருந்து இங்கேயே மடிவேன்; குறுக்குத் தீவிற்குச் செல்ல மாட்டேன். நான் இருக்கும் சங்கதியை யென் நண்பர்களுக்கு அறிவிக்கமாட்டேன். இன்றேல் அவர்களிடமிருந்து நான் தப்புவது கஷ்டமாக முடியும். மீனா! உன் தந்தை என்னை விசுவாசிக்கிறார். நிலையான விசுவாசமும், அவர் விஷயத்தில் கவனம் செலுத்துதலும் இடையறாத பக்தியும் என்னிடமிருந்தால் அவர் என்

186592

னைத் தம் குடும்பத்தில் ஒருவனைச் சேர்த்துக் கொள்ளுமாறு தூண்டப்படலாகாதா? ஒரு காரியம் சந்தோஷத்தில் முடிவதாயின் அதற்காக நேர்ந்த கால தாமதத்தை யார் கருதுவார்கள்?'' என்றான்.

அவனுடைய கருத்தென்னவெனில் "நான் உன் தந்தையிடம் மரியாதையும், விசுவாசமும் அவர் விஷயங்களில் ஆவலும் எச்சரிக்கையும் காட்டி நடந்து கொண்டால் என்னைத் தமது மருமகனை ஏற்றுக் கொள்ளமாட்டாரா?" என்பதே.

மீனாள்:—" நீ அம்மாதிரி முடிவு ஏற்படுமென்று கனவு காணவேண்டாம். ஏனெனில் அது முடியாத காரியம் சம்பவிக்க முடியாத விஷயம். நீ என் தந்தையின் வீட்டில் வசிக்கிற மட்டும், அவருடைய ஆகாரத்தையுண்டு அவர் விருந்தினனாக இருக்குமட்டும் அவரிடம் உதவி பெற்றுக் கொண்டிருக்கிற மட்டும், இவன் நமது ஆதரணையிலிருக்கிறான் என்று அவர் நம்புமாறு நீ நடந்து கொள்கிறவரையில் அவர் மிக்க உதாரகுணமும் அன்புமுடைய விருந்தளிப்போராகவே நடந்து கொள்வார். அதைவிட்டு அவரையும் அவர் குடும்பத்தையும் பற்றிய விஷயங்களில் பிரவேசித்தாயோ அவர் தமது முன்னோர்களின் பெருமையும், தனமதிப்பும், அகங்காரமும் பொருந்திய ஒரு தலைவனாக மாறிவிடுவார். அப்போது அவருடைய களங்கமற்ற உதாரமும் உல்லாசமும் பொருந்திய குணம் அடியோடு எங்கோ மறைந்துபோம். முருகப்பன் மேல் அவருக்கு நெடுநாட்களாய் மிக்க அன்புண்டாகியிருந்தது. அவன் தந்தை எங்கள் வீட்டை விட்டு ஜலபுரத்திலுள்ள மாளிகைக்கு வசிக்கப் போவதாய்க் கேட்டபோது அதற்கு ஒப்புக்கொண்ட

என் தந்தை 'என் பெண்கள் தங்கள் தோழனை யிழந்து விட்டதற்காக வருந்துவார்கள்' என்று கூறி னார். அத்தகைய அன்பு முருகப்பன் மேல் வைத் திருந்த அவர், அற்பமான ஒரு சந்தேகம் அவன்மே லுண்டானதற்காக அவனை யடியோடு வெறுத்து விட்டார். இதனின்று அவருடைய சுபாவ குணத்தை நீ நன்றாக அறிந்து கொள்ளலாகும். அவ ருடைய எண்ணமென்னவெனில், வடதேசத்தில் சரி யான குடியில் பிறந்தவர்களாகவும் சற்று குற்றமற்ற வமிசத்தில் ஜனித்தவர்களாகவுமிருக்கவேண்டும். அப் படிப்பட்டவர்களே தமது குடும்பத்தில் சம்பந்தம் செய்துகொள்ளத் தகுதியுடையவர்க ளென்பதே" என்றாள்.

குல:—என் வரையில் தெரிந்த மட்டில் என் குடிப்பிறப்பு அத்தகையதாக யிருக்கலாகும் என்பதே.

மீனாள்:—அதெப்படி? நீ அந்த வடநாட்டில்பிறந்த சந்ததி யென்று கருதுவதற்குப் போதுமான காரணம் என்ன விருக்கிறது?

குல:—என் குடும்பத்தைப்பற்றிய சங்கதி யெனக்கு ஒன் றும் தெரியாதென்று நான் முன்னமே யுனக்குக் கூறியிருக்கிறேன். நான் என் சிறு வயதை என் தந்தையோடு ஒரு தீவிலுள்ள தோட்டத்தில் கழித்து விட்டேன். என் தந்தை அப்போதிருந்த மாதிரியை விட்டுப் பிறகு வேறு மாதிரியாகத் திரும்பிவிட்டார். நாங்கள் தென் நாட்டாரால் கொள்ளை யடிக்கப்பட் டோம். மிக்க வறுமையான நிலையடைந்தோம். அப் போதுண்டான கோபத்தால் என் தந்தை அத்தென் னாட்டார்மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ளவேண்டு மென்று தீர்மானித்து தமக்கு வேண்டியவர்களைச்

சேர்த்துக்கொண்டு ஒரு கப்பல் தயாரித்துக்கொண்டு புறப்பட்டார். அந்த விரோதிகளைக் கடலில் எங்கு கண்டாலும் சண்டையிட்டுத் தொலைப்பதையே தமது வேலையாக வைத்துக்கொண்டார். இவர் இவ்வாறு நடந்துகொண்டிருந்ததால் இவர் கப்பல் கொள்ளைக் கப்பல் என்று பெயரிடப்பட்டது. அவர் இட்ட சண்டைகளில் சில சமயம் ஜெயமும் சில சமயம் அபஜெயமும் நேர்ந்தன. அத்தகைய தொழிலில் அது இயற்கையாகச் சம்பவிக்கத் தக்கதே.

இவ்வாறிருக்கையில் என் தந்தையிடமிருந்த ஆட்கள் அளவு மீறிய கொடுமைகளைச் செய்யத்தொடங்கினார்கள். அவர் அவர்கள் செய்கைகளைக் கண்டிக்கத்தொடங்கிய போது ஒரு சமயம் அவர் அச்சண்டாளர்களால் கொல்லப்பட்டார். அத்தகைய கப்பலின் தலைவர்களுக்கு அம்மாதிரி யாபத்து நேர்வதுண்டு. ஆனால் என் தந்தை எங்கிருந்து வந்தாரென்பதும் அவர் பிறப்பிடம் எது என்பதும் எனக்குத்தெரியாது. அவற்றைப்பற்றி நான் அக்கரையாய் ஆராய்ச்சி செய்யவுமில்லை'' என்றான்.

மீனாள்:—"உன்னுடைய தந்தை குறைந்தது இங்கித நாட்டார் என்று நம்புகிறேன்'' என்றாள்.

குல:—அதைப்பற்றி எனக்குச் சந்தேகமேயில்லை. அவர் பெயரைப் பகிரங்கமாகக் கூறினால் யாவரும் அச்சப்படும்படி நான் செய்து விடுவேன். அவர் பெயர் அந்நாட்டவரின் பெயரே. அதோடு அவருக்கு அந்நாட்டுக் கல்வியிலுள்ள அப்பியாசமும், அவர் எனக்கு அதைக் கற்பிக்க எடுத்துக்கொண்ட சிரத்தையும் அவர் அந்நாட்டார் என்று நன்குவிளக்குகின்றன. நான் அன்னியரிடம் காட்டும் முரட்டுத்தனமான

செய்கைகள் என்னுடைய இயற்கைக்குணம் நடக்கை யிவற்றைச் சேர்ந்ததாக இல்லாவிடின் அவை யென் தந்தையின் வழியில் வந்தவையேயாகும். என்னுடைய மேலான எண்ணங்களும் நடக்கைகளும் உன் அன்பாலும் உன் தூண்டுதலாலும் உண்டானவையே. அப்படியிருந்தும் என்னிடம் மாருன இரண்டுவித நடக்கைகளிருப்பதாக எனக்குச் சில சமயங்களில் தோன்றுகின்றன. ஏனெனில் இதுகாறும் தங்கள் பெயர்களைக் கேட்டதே யாவரும் நடுங்கும்படியான ஒரு தைரியம் பொருந்திய கூட்டத்திற்கே தலைவனுக விருந்த நான், இப்போது தனியாய் வனப்பில் சிறந்த மீனுளிடம் காதலைப்பறிப் பேசிக்கொண்டிருப்பது எனக்கே சந்தேகத்தையும் வியப்பையுமளிக்கிறது'' என்றுன்.

மீனுள்:--"அதிகமான பரபத்தியமில்லாமலே தன் பெயரை யிப்படிப் பயங்கரமானதாகச் செய்துகொள்ளும் தீர முடைய ஒரு தலைவனுய் நீ யிருந்திராவிட்டால், தைரியநாதம் பிள்ளையின் புத்திரியிடம் இத்தைரியமொழியைக் கூறும்படியான சந்தர்ப்பம் உனக்கு வாய்ந்திராது. அவ்வாறு கூறும்படி யுனக்கு அனுமதி கிடைத்திராது. என் உள்ளம் பூர்வீக மாதர்களின் உள்ளம்போல், மிருதுவான வார்த்தைகளால் வசப்படுத்தக்கூடியதல்ல, துணிகரமான தைரியச் செயல்களால் வசப்படுத்தக்கூடியது'' என்றுள்.

குலசேகரன்:—" ஆம்! அத்தகைய உள்ளத்தை வசப்படுத்துவதற்கு நான் எத்தகைய காரியத்தைச் செய்ய வேண்டுமோ வென்பதுமட்டும் தெரிந்தால்..." என்றுன்.

மீனுள்:—நீ யுன் நண்பர்களிடம் போய்ச் சேர். உன்

அதிஷ்டவழியில் செல். மற்றதை வினைப்பயன்படி விட்டுவிடு. நீ ஒரு தீரம்பொருந்திய கப்பற்படையின் தலைவனாக வந்துவிட்டால் என்ன நேரிடுமென்று யாரால் கூறமுடியும்?

குலசேகரன்:—"அது சரிதான். ஆனால் நான் அத்தகைய நிலைமையில் திரும்பிவரும்போது நீ அதற்கிடையில் இன்னொருவன் காதலியாகவோ மனைவியாகவோ ஆகிவிட்டிருக்கமாட்டாய் என்று எனக்கு என்ன நிச்சயம் இருக்கிறது? நானும் இடையில் இன்னொரு கன்னிகையின்மேல் காதல்கொண்டு அவளை மணம் புரிய மாட்டேனென்ற நிச்சய மென்னவிருக்கிறது. நம்மைப் பந்தப்படுத்தத்தக்க விஷயம் ஒன்றுமில்லை. ஆகையால் நான் எப்படி நம்பிக்கையோடிருப்பது?" என்றான். அதன்மேல் மீனாள், "அப்படியாயின் நாம் நமது பூர்வீக வழக்கப்படி பிரமாணிக்கம் செய்து கொள்வதே திருப்தியானது. நான் கூறுவதைக் கேள். உனக்கு இந்த ஒப்பந்தம் சம்மதமாயிருப்பின், நீயே யென்னை நிராகரித்து விடுகிறவரையில் நான் வேறு எவரையும் விரும்புவதில்லை யென்று சத்தியம் செய்து கொடுக்கிறேன். அது போதுமல்லவா? அதற்கு மேலும் நான் செய்யவுமாட்டேன்" என்றாள்.

குலசேகரன் சற்றுநேரம் சிந்தித்துக் கடைசியில் "அப்படியாயின் நான் அதோடு திருப்தியடையவேண்டியதே. ஆனால் நீயே யிந்த நிபந்தனையை ஏற்படுத்துகிறாய் என்பதை மறக்கவேண்டாம். இதுமட்டுமல்ல; இந்திரபுரி இராஜாங்கம் சட்டத்திற்கு விரோதமானதென்று விதித்திருக்கும் காரியத்தில் என்னைப் பிரவேசிக்கும்படி நீயே யிப்போது பலவந்தப்படுத்துகிறாய்" என்றான்.

மீனாள்:—"ஆனால் நான் இத்தகைய மூடக்கொள்கைகளைச்

சட்டை செய்பவளல்ல. இந்திரபுரியாருடைய சட்டத்திற்கு விரோதமாகச் செய்யப்படும் காரியங்களை நான் நமது விரோதிகளுக்கு ஈடுக்கீடாகச் செய்யும் காரியங்களாகவே கருதுகிறேன்'' என்றாள்.

குலசேகரன் அவளை நோக்கி "உலக அனுபவமரியாத ஒரு மாதினிடத்தில் இத்தகைய அபூர்வமான தீர குண மிருக்குமென்று நான் எதிர்பார்க்கவேயில்லை. என் கூட்டாளிகள் சில சமயங்களில் அளவுமீறி அக்கிரமச் செயல்களைச் செய்கிறார்கள். ஏனெனில் அத்தென்னாட்டார்களால் அவர்கள் அதிகமாகக் கசக்கப்பட்டிருக்கிறபடியால் எப்போது அவர்கள்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ளச் சமயம் வாய்க்குமோவென்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் செய்கையை யடக்கிவிட என்னால் முடியுமா?'' என்றான்.

மீனாள்:—"உன்கூட விருப்பவர்களின் செய்கைக்காக உன் மேல் ஒருவரும் குற்றம் கூறமுடியாது'' என்றாள்.

குலசேகரன்:—"உன் உதாரகுணம், மீனா! மிகவும் மெச்சத் தக்கது. ஆனால் நீ வாக்களித்த விஷயம்-அவ்விஷயமாக எனக்கொரு உறுதிமொழி, சத்தியவாக்கு வேண்டும்'' என்றான்.

மீனாள்:—"ஆனால் அத்தகைய வாக்குத்தத்தம் இங்கு செய்யப்படாது; குறுக்குத் துறையில்தான் செய்யப்பட வேண்டும். நமது வாக்குத்தத்தத்திற்கு சாட்சியாக நம் நாட்டுப் புராதன தெய்வமாகிய சுடுகாட்டு வீரனை யழைக்கவேண்டும். ஆனால் நீ அத்தகைய பயங்கர தெய்வத்தின் பெயரைக் கேட்கவே அஞ்சுகிறாயென்று நினைக்கிறேன்'' என்றாள்.

அவள் மொழிகளைக் கேட்ட குலசேகரன் நகைத்து "என் அன்பார்ந்த மீனா! நான் மெய்யாகவே பயத்தை

யுண்டாக்கத்தக்க விஷயங்களுக்கே பயப்படுவதற்குக் காரணமில்லை. அப்படியிருக்க பயத்தை யுண்டாக்கக் காரணமில்லாத இத்தகைய விஷயங்களுக்கு எங்கேனும் பீதியடைவேனென்று நீ கருதலாகுமோ?'' என்றான்.

மீனாள்:—“அப்படியாயின் நீ யவற்றை நம்பவில்லை. ஆகையால் நீ என் காதலனாக விருப்பதைவிட என் தங்கையாகிய புனிதவதியின் காதலனாக விருப்பதற்கே தகுதியுடையவன்'' என்றாள்.

குலசேகரன் :—நீ எதைதை நம்புகிறாயோ, நீயும் அம்முட்டாளாகிய பைரவி கிருஷ்ணப்பனும் இக்கிராமவாசிகளைப்பற்றி எவ்வளவு பேசுகிறீர்களோ, அவ்வளவும் நான் நம்புகிறேன். ஆனால் அவற்றிற்குப் பயப்படும்படிமட்டும் எனக்குக் கூறவேண்டாம்.

மீனாள்:—பயமா! பயப்படும்படி நான் ஒருபோதும் கூறமாட்டேன். ஏனெனில் அத்தேவதைகள் தங்கள் பயங்கரமான சொரூபங்களோடு எதிரில் வந்தபோதும் எங்கள் முன்னோர்கள் பயந்ததில்லை. ஆனால் அவைகள் வல்லமையுள்ள தேவதைகள். நீ கண்மூடித்தனமாய் அவற்றைப்பற்றி அஞ்சமாட்டேன் என்றால், முன்பின் அறியாத ஒரு எதிரியைப்பற்றிக் கூறுவதுபோல் நினைக்கிறாயோ என்ன?

குலசேகரன்:—“இல்லையில்லை. நான் இந்த வடபாகத்தில் எல்லாம் தேவதூதர்களாகக் கண்டேனேயன்றி இம்மாதிரி விஷயங்களைக் காணவில்லை. ஆனால் வேறிடங்களில் இங்குள்ளவற்றைப்போல் மிக்க வல்லமை யுள்ளவைகளென்று அந்நாட்டாரால் கருதப்படும் தேவதைகளிருக்கின்றன'' என்றான்.

மீனாள்:—“அப்படியாயின் நீயும் சாதாரண மனிதர்கள் அறியொணாத அதிசய விஷயங்களைக் கண்டிருப்பாய்'' என்றாள்.

## 34-வது அத்தியாயம்.

குலசேகரன் சற்றுநேரம் பேசாமலிருந்து, பிறகு அடியிற்கண்ட சங்கதியைக் கூறத்தொடங்கினான் :—

"என் தந்தை யிறந்துபோகக் கொஞ்சகாலத்திற்கு முன், நான் சிறு வாலிபனாகவிருந்தபோதிலும் ஒரு கப்பலின் கப்பித்தானாக அனுப்பப்பட்டேன். அக்கப்பலில் முப்பது துணிகரமான ஆட்களிருந்தார்கள். ஆரம்பத்தில் எங்களுக்கு நல்ல அதிஷ்டமில்லை. சில நாட்கள் வரையில் மீன்வேட்டையாடும் படகுகளும், அல்லது அற்ப சாமான்களை யேற்றிச்செல்லும் சிறு கப்பல்களுமே எங்களுக்கு இரையாகக் கிடைத்தன. தங்களுக்கு நல்ல பொருள் கிடைக்காததற்காக அக்கப்பல்களிலுள்ள ஆட்களின்மேல் குரூரமாய் என் ஆட்கள் வஞ்சம் தீர்த்துக்கொள்ளக் கருதினார்கள். அவர்களை யடக்குவது எனக்கு மிக்க கஷ்டமாயிருந்தது. கடைசியில் எங்கள் மனம் முறிந்துவிட்டது. ஆகையால் கரையிலிருந்த ஒரு கிராமத்தைச் சூறையாடுவதென்று தீர்மானித்தோம். ஏனெனில் அவ்வழியாகத் தென்னாட்டு இராஜாங்கத்தைச் சேர்ந்த ஒரு மாகாண அதிகாரி (கவர்னர்) யின் பொக்கிஷம் அவ்வழியாகச் செல்கிறதென்று தெரிந்தது.

நாங்கள் அவ்வாறே அக்கிராமத்தைத் தாக்கிப் பிடித்துக்கொண்டோம். என் ஆட்கள் அவ்வூர் ஜனங்களைக் குரூரமாய் நடத்தத் தொடங்கினார்கள். நான் அதைத் தடுத்துக்கொண்டிருக்கையில் பொக்கிஷம் கொண்டுபோவோர்கள் தப்பித்துக்கொண்டு போய்விட்டார்கள். அதனால் என் ஆட்களுக்கு என்மேல் முன்னமேயிருந்த அதிருப்தி வெறுப்பாய் மாறிவிட்டது. தங்களுக்குக் கிடைக்க வேண்டிய செல்வத்தைக் கிடைக்காமற் செய்ததற்கு

நானே காரணம் என்று கருதினார்கள். அதன்மேல் அவர்கள் வழக்கப்படி கூட்டம் கூடி எனக்குத் தனிவாசத்தண்டனை விதிப்பதென்று தீர்மானித்து விட்டார்கள். தனிவாசத் தண்டனை யெனில் இத்தகையக் கப்பல்களில் கப்பல் கப்பித்தானாயினும், கப்பல் ஆட்களில் வேறு எவனாயினும் யாவரும் வெறுக்கத்தக்க ஒரு குற்றத்தைச் செய்யின் அவர்களைச் சனசஞ்சார மில்லாத ஒரு தனித்தீவில் விட்டு விட்டு வந்து விடுவதே அவர்கள் விதிக்கும் தண்டனையாகும். அதன்படி யவர்கள் கூட்டம்கூடி என்னை யொரு தீவில் விட்டுவிடுவதெனத் தீர்மானித்தார்கள். அங்கிருந்த தீவுகளில் பெரும்பாலானவைகளில் பேய்களும் துஷ்ட தேவதைகளும் வசிப்பதாக வதந்தி.நான் என் அதிகாரத்திலிருந்து நீக்கப்பட்டு அத்தகைய ஒருதீவில் விட்டுவிடப்பட்டேன். அத்தேவதைகள் அங்குள்ள பலதீவுகளி லிருக்கும் புராதன ஜனங்களால் பூஜிக்கப் படுகின்றன. அத்தீவுகளிலிருந்த ஜனங்களில் பெரும்பாலாரை யக்கிரமஸ்தர்களாகிய தென்னாட்டார், அத்தீவார் ஒளித்துவைத்திருக்கும் பொருளைக் காட்டும்படி யவர்களை யிம்சைசெய்து கொன்றுவிட் டிருக்கிறார்கள்.

நான் விடப்பட்ட தீவிற்குச் சவப்பெட்டி யென்று பெயர். மிக்க நாணயமான பெயரல்லவா? அத்தீவு அத்தகைய துஷ்ட தெய்வங்கள் வசிப்பதில் பெயர்பெற்றது. அங்குசென்று ஒருபகல் வசிப்பதற்கு மட்டும் இலக்ஷ ரூபாய் கொடுப்பதாயினும் அக்கப்பலி லிருந்த ஆட்களில் ஒருவன் கூட உடன்படமாட்டான். அத்தகைய தீவில் என்னைத் தனியாக விட்டுவிட்டு அச்சண்டாளர்கள் போய் விட்டார்கள்." என்றான்.

**மீனாள்:**—பிறகு நடந்த சம்பவங்களைக் கூறு.

**குலசேகரன்:**—" அத்தீவு சுமார் இரண்டுமைல் நீளமும்

ஒருமைல் அகலமுமே யுடையது. எங்கும் குத்துச் செடிகளே விசேடமாயிருந்தன. எங்கோ ஒவ்வொரு பெரிய விருட்சம் இருந்தது. எத்தகைய ஆபத்தில் சிக்கினாலும் மனிதனுக்கு உயிரை நீடித்துவைத்துக் கொண் டிருக்கவேண்டு மென்ற ஆவல்மட்டும் இருப்பது இயற்கையன்றோ. ஆனால் அதற்கு ஆகாரம் வேண்டும். அத்தீவிலுள்ள புதர்களில் ஒருவிதக் கடல் வாத்துகள் கூடுகட்டிக்கொண் டிருந்தன. மனிதன் மற்றப் பிராணிகளுக் கெல்லாம் விரோதியாகிய எமன் என்று அவைகளுக்குத் தெரியாதவரையில் அவை மனிதனுக்குப் பயப்படுவதில்லை. ஆகையால் அங்கிருந்த பட்சிகள் நான் அருகில் சென்றபோதும் என்னைக்கண்டு ஓடிவிடாமல் இருந்தன. அதையறிந்த போது எனக்குச் சந்தோஷ முண்டாயிற்று. உடனே பட்டினியால் மடியவேண்டி நேரிடாதென்று தைரிய மடைந்தேன். மரத்திலிருந்து ஒருகழி யொடித்துக் கொண்டு அதனாலடித்து அப்பட்சிகளைக் கொன்று அவற்றையும் அவற்றின் முட்டைகளையும் தின்று கொண்டு சில தினங்கள் காலத்தைக் கழித்தேன். அதற்குள் அப்பட்சிகள் மனிதனுடைய குணத்தைத் தெரிந்துகொண்டு என்தலையைக் கண்டதே யோடி விடத்தொடங்கின. அதனால் நான் மிக்க தந்திரமாய்க் கஷ்டத்தோடு இரைதேட வேண்டியதாய் விட்டது. ஒருநாள் அதிகாலையில் நான் கடற்கரையில் உலவிக் கொண்டே சென்றபோது ஓர் மணல்திட்டிலிருந்த ஒரு ஆமை துரிதமாய் அங்கிருந்த மணல்குழியின் மேல் மணலைத்தள்ளி மூடிவிட்டுத் துரிதமாகக் கடலை நோக்கி யோடிவிட்டது: நான் ஒருவிதச் சந்தேகங் கொண்டு அந்த விடத்தைத் தோண்டிப் பார்த்த

போது அங்கு ஆமையின் முட்டைகளிருந்தன. அது முதல் கரையில் ஆமைகள் மணலின்கீழ் முட்டையிடும் சங்கதியை யறிந்துகொண்டேனாதலின், அவையும் எனக்கு ஆகாரமாய் உதவின....'' என்றான்.

மீனாள்:—“இவைகளிருக்கட்டும், நீ கூறிய பேய்கள் ஆவேசங்களின் சங்கதியென்ன ?'' என்றாள்.

குலசேகரன்:—அவைகளைக் கண்டேன். எவ்வாறெனின், காலை பொழுது சரியாக விடியாதிருக்கும் சமயத்தினுள்ள குறைந்த இருட்டிலும், அந்திப் பொழுதில் பூரணமாக இருள் சூழுவதற்குச் சற்று முன்னும் என்முன் சற்று தூரத்தில் தென்னாட்டு மாலுமியைப் போல் அகன்ற பாகை யணிந்துகொண்டு கையில் துப்பாக்கி வைத்துக்கொண்டிருக்கிற உருவம், அல்லது மேற்கிந்தியனைப்போல் நீண்டபாலா ஏந்திய உருவம் மெல்லிய புகையினிடையில் நிற்பதுபோல தோன்றியதுண்டு.

மீனாள்:—நீ முன்சென்று அதைக் கண்டு பேச முயலவில்லையோ ?

குலசேகரன்:—“நான் செல்லாமலில்லை - சென்றேன். ஆனால் நான் அப்படிச் சென்றபோதெல்லாம் அருகிற் சென்றபோது அங்கு செடியும் புதரும்தானிருந்தன'' என்றான்.

அதைக்கேட்ட மீனாள் சற்று மனச்சலிப்போடு “சரி நீ நான் பயனற்றகதையைக் கேட்குமாறு என்னையேமாற்றிவிட்டாய்; தொலையட்டும். நீ எவ்வளவுகாலம் அத்தீவில் வசித்திருந்தாய் ?'' என்றாள்.

குலசேகரன்:—“நான் நான்கு வாரங்கள் அத்தீவில் மிக்க கஷ்டத்தோடு காலத்தைக் கழித்தேன். அதன்பிறகு ஆமை வேட்டைக்காக வந்த படகுக்காரர்கள் என்

னைக் காப்பாற்றினார்கள். ஆயினும் நான் தனியாய் அத்தீவில் இருந்ததால் ஒரு நன்மையும் அடையாது போகவில்லை. எப்படியெனில் அங்கிருந்தபோது தான் நான் என்மனதிற்கு அவசியமான இரும்புக் கவசத்தை எனக்குள் நானே தயாரித்துக்கொண்டேன். அது நான் இப்போது பிறருடைய துரோகத்திலும் என் ஆட்களுடைய வஞ்சத்திலு மிருந்து என்னைக் காப்பாற்றத்தக்க ஆயுதமாக விருக்கிறது. அக்கவசம் எதுவெனில், அந்தத் தீவிலிருந்த போது 'நாம் மற்றபேரினும் மிருது மனமுடையவனாய் நடந்துகொள்ளலாகாது, அவர்களுக்குமேல் நாணய முடையவனாகக் காட்டிக் கொள்ளலாகாது, வினைப் பயன்படி என்னோடு சம்பந்தப்பட் டிருப்பவர்களை விட நாம் ஜீவகாருண்ய முடையவனாகவாவது நாணயம் அச்சம் உடையவனாக வாவது, அக்கிரமத்திற்குப் பின்னிடைகிறவனாகவாவது இருக்கலாகாது,' என்று எனக்குள் தீர்மானித்துக் கொண்டேன்.

நான் என்பூர்வ சரித்திரத்தைச் சிந்தித்துப் பார்த்த போது, மற்றவர்களைக் காட்டினும் தைரியமும், துணிகரமும், தந்திர சாமர்த்தியமும் உடையவனாக நடித்ததே எனக்கு அவர்களில் தலைமைஸ்தானத்தை யளித்ததென்று தெரிந்தது. அப்படிக்கின்றி அவர்களைக்காட்டிலும் யோக்கியதையும், பெருந்தன்மையும் நாகரீகமு முடையவனாக நடப்பதால் அவர்கள் என்னை யொரு அன்னிய மாதிரி யுடையவனாகக்கருதி பொறுமையும் விரோதமும் கொள்கிறார்களென்று அறிந்து கொண்டேன். நான் இவற்றை யனுபவத்தில் கண்டறிந்தேன். பிறகு நான் நன்றாகச்சிந்தித்துப் பார்த்தேன். இவர்களுக்காக நான் என்பெருந்தன்மையான குணம், புத்தி, கல்வி முதலியவற்றை யொரு

பக்கம் மூடிவைத்துவிட முடியாதவரையில் நான் என்னால் கூடியவரையில் அவற்றையெல்லாம் மறைத்துக்கொண்டு அவர்களைப்போல் நானும் ஒரு முரட்டு மானுமியாகத் தோன்றுவதே நலம் என்று கருதினேன். அம்மாதிரி அவர்களை யென் ஆளுகையில் கொண்டுவந்துவிட்டால், அவர்கள் அன்னியர்க்குச் செய்யும் கொடுமைகளை நம்மால் கூடியவரையிலாவது தடுக்கலாகும். அதன்மேல் அனுபவத்தால் அத்தகைய முரடர்களை யடக்கியாள மேலுக்கேனும் அவர்களைவிடத் தைரியமும் துணிகரமுடைவனாக நடிக்கவேண்டுமென்றும் தெரிந்துகொண்டேன். சுருக்கமாகக் கூறும்பட்சத்தில் அவர்களைப்போன்ற குணமுடையவனாகவே நான் நடிக்கவேண்டுமென்று தெரிந்துகொண்டேன்.

அச்சமையம் என் தந்தையினுடைய துர் அதிட்டத்தைக் கேட்டதே எனக்குண்டான கோபமும் வஞ்சமும் நான் கொண்டிருந்த அபிப்பிராயத்தில் என்னை ஸ்திரப் படுத்திவிட்டன. என் தந்தைகூட தன் கையின்கீ ழிருந்தவர்களைவிட பெருந்தன்மையும் சீவகாருண்யமும் அதிக கல்வியுமுடையவராக விருந்ததாலேயே அவருக்குத் தீங்கு நேர்ந்தது. அவர்கள் என் தந்தை மிக்க நாணயமான பெரிய மனிதரென்றும், தம்மைப்போன்ற இனத்தாரிடம் சம்பந்தம் செய்துகொண்டு தங்களை விட்டுப் போய்விடுவார் என்றும் எண்ணிக்கொண்டார்கள். அவர் அப்படிச் செய்வதால் தங்களுக்குத் தீங்கிழைத்து விடுவாரென்றெண்ணியே யவரைக் கொன்றுவிட்டார்கள். இயற்கைப்படிக்கும் நியாயப்படிக்கும் நான் அவரைக் கொன்றவர்கள்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ளவேண்டியது என் கடமையாய்விட்டது. நான் சீக்கிரத்தில் என் தலைமையின்கீழ் சில ஆட்களைச் சேர்த்துக்கொண்டேன். அத்

தகைய ஆட்கள் தீவில் அதிகமா யிருந்தார்கள். நான் என்னையே தனியாய்த் தீவில் விட்டுவிட்டச் சண்டாளர்களைச் சேர்க்காமல் மிக்க ஜாக்கிரதை யெடுத்துக்கொண்டேன். அதன்பிறகு என் தந்தையைக் கொலை செய்தவர்கள்மேல் நான் மிக்க கொடிய வஞ்சம் தீர்த்துக்கொண்டேன். அதுவே அவர்கள் என் விஷயத்தில் அச்சங்கொள்வதற்கு வேண்டிய வழியை யுண்டாக்கிவிட்டது. அதோடு நான் அபிநயம்செய்ய மேற்போட்டுக்கொண்ட அக்குணம் இயற்கையாகவே என் மனதில் சேர்ந்துகொள்ளத் தொடங்கியது. என்னுடைய குணம் நடக்கை முதலியவை அடியோடு மாறிவிட்டதைக் கண்டவர்கள், நான் அத்தீவில் தனியாக விருந்தபோது அங்குள்ள பேய்களோடு சம்பந்தப்பட்டதாலுண்டான தென்றும், சிலர் நான் அப்பேய்களின் சினேகமே பெற்றிருக்கிறேனென்றும் கருதினர்கள். அதனால் யாவர்க்கும் என் விஷயத்தில் மிக்க அச்சமுண்டாகிவிட்டது'' என்றான்.

மீனாள்:—"நீ இன்னும் கூறப்போகிற சங்கதிகளைக் கேட்க எனக்குப் பிரியமாயிருக்கிறது. நீ அத்தீவில் கண்ட பேய்களின் குணத்தைப்போன்ற குரூரமான குணங்களை யுடையவனாய்விட்டாய் போலும். அவற்றைக் கேட்க எனக்கு மிக்க பிரியமே'' என்றாள்.

துல:—நான் அம்மாதிரியே மாறி விட்டுத்தா னிருப்பேன். அப்படிக்கின்றி நான் அதிலிருந்து தப்பித்துக் கொண்டேனெனில் அதற்குக் காரணம் உன் அதிசய குணமேயாகும். என் இயற்கைக்குணத்தை மறைத்துக் கொண்டு என்னிடமிருக்கும் ஆட்களைக்காட்டிலும் மிக்க குரூரமான குணமும் கடின சித்தமுமுடையவனாக நடந்து கொண்டால் தான் அவர்களை யடக்கி யாளக் கூடியதாயிருந்தது.

மீனுள்:—ஆகையால் அக்கிரமத்திற்கஞ்சாது எத்தகைய தீயகாரியங்களையும் செய்யப் பழகிவிட்டாய்.

குல:—நான் அவர்களிடம் அப்படி அபிநயிக்கவேண்டியிருந்தது. ஆனல் வஞ்சம் தீர்த்துக் கொள்வதென்ற எண்ணத்தை விட்டு விட்டுத் தைரியத்தோடு துணிகரமான காரியங்களைச் செய்வதனல் பிரசித்தியடைய வேண்டும் என்று தீர்மானம் செய்துகொண்டேன். இன்னெருவிதமான தந்திரத்தால் என் ஆட்கள் செய்யும் குரூரச் செயல்களைத் தடுக்கத் தீர்மானித்தேன். எவ்வாறெனில், நான் அவர்களைவிட மிக்க அதிக குரூரமாய் நடந்து கொள்பவன்போல் நடிப்பதால் அவர்களில் சிலருக்கே எங்களிடம் சிக்கிய சிறையாட்களிடம் இரக்கமுண்டாகி அவர்களே சிறையாட்களைப் பற்றி சிபார்சு செய்கிருர்கள். இதனல் நான் நன்மை செய்ய இடமுண்டாகிறது. கடைசியில் என் விஷயங்களையெல்லாம் மறைக்காமல் மனம்விட்டு உன்னிடம் கூறிவிட்டபடியால் உன் மதிப்பில் என்னை நானே குறைத்துக் கொண்டவனுனேன். ஆயினும் உன்னிடம் எதையும் மறைக்கவில்லையென்ற திருப்திமட்டும் எனக்கிருக்கிறது.

மீனுள்:—"குறுக்குத் தீவில் அக்கப்பல் வந்திருக்கிறதென்றும் நாங்கள் அங்கு வரப்போகிருேமென்றும் உனக்குத் தெரியும். நான் எப்படியும் உன் நண்பர்களைக்காண்பேன், கண்டால் அவர்களுடைய மாதிரியாலும் நடக்கையாலும் நான் யாவும் தெரிந்துகொள்வேன் என்று உனக்குத் தெரியாவிட்டால் நீ உண்மையைக் கூறுவாயென்பது என்ன நிச்சயம்?" என்ருள்.

குல:—" மீனு ! நீ என் விஷயத்தில் மிக்க அக்கிரமமாகக்

கருதுகிருய். நான் ஒரு கப்பற்றலைவனென்றும் அதிட்டவழியில் நடப்பவனென்றும், கொள்ளைக் கப்பலைச் சேர்ந்தவனென்றும் உனக்குத் தெரிந்த மட்டில் நான் கூறியயாவும் நீயே யறிந்துகொண் டிருக்கலாமல்லவோ?" என்ருன்.

மீனுள்:—"நீ கூறுவதும் உண்மையே. நான் இவைகளையெல்லாம் அறிந்து கொள்ளலாம். ஆனல் விவகாரங்கள் இப்படி யிராவென்று நான் எவ்வாறு எதிர்பார்ப்பது? நீ தென்னுட்டாரிடம் யுத்தம் புரிவது ஒரு கெளரவமான தொழிலென்றும் அவ்விஷயத்தில் நீ காட்டிய குரூரம் ஒருவித நாகரீகமானதேயென்றும் நான் கருதினேன். அந்த நாட்டார் செய்த காரியங்களுக்காக நீங்கள் அவர்கள்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்வது நியாயமேயாகுமென்றும், அனேகம் ஏழைக்குடும்பங்கள் கொள்ளையடிக்கப்பட்டதும் கொலை செய்யப்பட்டதும் ஒரு விஷயத்தில் ஒப்பத் தக்கவையே யாகுமென்றும் நான் கனவு கண்டிருந்தேன். இப்போது நான் அக்கனவினின்றும் விழித்துக்கொண்டேன். ஆயினும் நான் தவருகக் கண்ட கனவிற்காக உன்மேல் நான் குற்றஞ் சாட்டமாட்டேன். குறை கூறவுமாட்டேன். அது என்னுடைய மூடத்தனமேயன்றி உன்னுடையதல்ல. இனி நாம் பிரிந்துவிடவேண்டியதே. நீ போய் வரலாம்" என்ருள்.

குலசேகரன்:—நான் உன்னிடம் உண்மையைக் கூறிவிட்டதற்காக குறைந்தது என்மேல் பூரண வெறுப்படையவில்லை யென்ருவது கூறிவிடு.

மீனுள் :—"நான் இதைப்பற்றிச் சிந்திக்க அவகாசம்வேண்டும். அப்போதுதான் என் மன உணர்ச்சி யெனக்

குச் சரியாய்த் தெரியும். இந்த விஷயமட்டும் இப்போதும் நான் கூறுவேன். அதாவது, இரத்தம் சிந்தும் குரூரமான தொழில்களாலும், கொலை முதலிய் செய்கைகளாலும் தன் வாழ்நாட்களைக் கழிக்கும் ஒருவன் மீனாளின் காதலனாக விருக்கமுடியாது. உன்னிடம் அத்தகைய காதலை மீனாள் எதிர்பார்க்கவில்லை. மீனாள் இன்னும் உன்னைக் காதலிப்பதாயின் சந்தோஷத்தா விருக்கமுடியாது'' என்று கூறிக் கொண்டே அவன் கைப்பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு என்பின் வரவேண்டாமென்று சமிக்கை செய்துவிட்டுத் துரிதமாக அங்கிருந்து சென்றாள்.

---

## 35-வது அத்தியாயம்.

மீனாள் செல்வதைப் பார்த்துக்கொண்டே யிருந்த குலசேகரன் சற்றுநேரம் அவ்வாறே பார்த்துக்கொண்டிருந்து கடைசியில் "ஆ! போய் விட்டாள். இவள் ஒருவிதக் கடின மனமும் நிர்த்தாட்சணியமுமுடையவளேனும் இப்படி நடப்பாளென்று நான் எதிர்பார்க்கவில்லை. என் அபாயகரமான வாழ்க்கையின் நடக்கையைப்பற்றி யிவள் திடுகிட்டுக் கலக்கமடையவில்லை. ஆனால் அதனால் நேரிடக்கூடிய கெடுதிகளைப்பற்றி யிவள் சற்றேனும் எதிர்பார்த்திருக்கவில்லை. ஆகையால் அவற்றாலேயே யிவள் மிக்க கலவரமும் திகிலு மடைந்துவிட்டிருக்க வேண்டும். ஆகையால் நான் ஒரு வடநாட்டு வீரன்போல் துணிகரமும் தைரியமுமான காரியங்களைச் செய்திருப்பதாகக்கூறி அதனால் அடைந்த கௌரவமனைத்தும், கடைசியில் நான் ஒரு கொள்ளைக் கப்பலைச் சேர்ந்தவன் என்ற விஷயம் வெளியானவுடனே அடியோடு போய் விட்டன. கொள்ளைக் கப்பலைச் சேர்ந்

தவர்கள் எத்தகைய தைரியமும் துணிகரமுமாகிய வீர தீரச் செய்கைகளைச் செய்யினும் யோக்கியர்கள், நாணய மானவர்கள், மரியாதைக்குரியவர்கள் என்ற கட்சியில் சேர்க்கப்படுவதாகக் காணேம். அடடா கடைசியில் இந் தக் கள்ளப்பயல்கள் யோக்கியர்களாக வில்லாததற்காக வா நான் இந்தக் கன்னிகாரத்தினத்தை யிழந்து விடுவது ! இத்துஷ்டர்களெல்லாம் ஒரே புயற்காற்றில் கடலில் அமிழ்ந்துபோ யிருக்க லாகாதா? அக்கப்பலேயும் அவர் களையும் இக்கடல் இந்தக் குறுக்குத் தீவிற்குக் கொண்டு வந்து சேர்த்ததற்குப் பதிலாக இடையில் நடுக்கடலில் முழுகடித்து விட்டிருக்கலாதா ? ஆயினும் இத்துஷ்டப் பயல்களின் நடக்கைக்காக நான் இக்கன்னிகையை யிழந்து விடமாட்டேன். தைரியநாதம் பிள்ளை குறுக்குத் தீவிற்குச் செல்வதன்முன் நான் செல்லவேண்டும். நான் என் ஆட்க ளோடு சந்திப்பதை அந்த ஆள் கண்டால் அவனுக்குக் கூட பயமுண்டாகிவிடும். ஆனல் நற்காலமாய் இந்த மூலையி லுள்ள தீவுகளில் ஜனங்களுக்கு நமது தொழிலைப்பற்றி வாய்ப் பிரஸ்தாபமாக மட்டுமே தெரியும். என்னுடைய காலம் அதிஷ்டகாலமாய்த் திரும்பிவிட்டால் நான் வீண கக் கடலில் சென்று அலையாமல் இந்தப் பாறைகளுக் கிடையிலுள்ள பூமியிலேயே சந்தோஷமாக இவைகளே பூரணமான நந்தவனங்களெனக் கருதி நிலையாக விருந்து விடுவேன்'' என்று தனக்குத் தானே கூறிக்கொண்டான்.

கடற்கொள்ளைக் கப்பலின் தலைவனுகிய குலசேகரன் மேற்கண்டபடி சிந்தித்துக் கொண்டே வசந்தமாளிகையை நோக்கி நடந்தான்.

* * * *

அன்று வசந்தமாளிகையில் நடந்த கேளிக்கையைப் பற்றி நாம் அதிகமாகக் கூறவேண்டுவதில்லை. ஏனெனில்

இதை வாசிக்கும் நண்பர்களுக்கு அச்சம்பவங்கள் இனிமை யாய்த்தோன்ரு. கேளிக்கைகளின் பின் வழக்கம்போல் பலவித நேர்த்தியான உணவுப்பொருள்கள் யாவர்களுக் கும் வட்டிக்கப்பட்டன. விருந்தினர் மிக்க பிரியத் தோடு திருப்தியா யருந்திஞர்கள். அதன்பின் பலவகைப் பட்ட குடிவகைகளும், பழவகைகளும், சிற்றுண்டிகளும் யாவர்க்கும் வட்டிக்கப்பட்டன. அதன் பின் வழக்கம் போல் நடனம் நடந்தது.

யாவும் சந்தோஷமாக முடிந்தபின் பைரவி கிருஷ் ணப்பனுடைய சங்கீதமும் நடைபெற்றது. கடைசியில் அன்றைய கேளிக்கை முடிந்ததாகத் தைரியநாதம் பிள்ளை கூறிவிட்டார். அச்சமயம் குலசேகரன் தைரியநாதம் பிள்ளையை நெருங்கிஞன். அவர் அப்போது தன் புத்திரி கள் இருவர்க்கும் இடையில் உட்கார்ந்திருந்தார். குல சேகரன் அவரை நோக்கி "ஹாக்கர் சுந்தரம்பிள்ளை தன் சரக்குகளையெல்லாம் விற்றுவிட்டுக் குறுக்குத் தீவிற்குப் புறப்படுகிருன். நானும் அவன் கூடச் செல்ல உத்தேசித் திருக்கிறேன்" என்ருன்.

தைரியநாதம் பிள்ளை அவன் கூறியதைக் கேட்டதும் மிக்க வியப்பும் அதிருப்தியும் அடைந்தார். அதோடு கொஞ்சம் வெறுப்பும் உண்டாயிற்று. ஆகையால் தைரிய நாதம் பிள்ளை ஆத்திரத்தோடு "நீ எவ்வளவு காலமாய் என் சகவாசத்தைவிட ஹாக்கர் சுந்தரம் பிள்ளையின் சக வாசத்தைச் சிரேஷ்டமாகக் கருதிஞய்?" என்று கேட் டார்.

குல:—"காலம் யாருடைய சௌகரியத்திற்காகவும் காத் திராது தாங்கள் குறுக்குத் தீவிற்குப் புறப்படு வதற்கு முன்னடியே நான் அங்கு செல்லவேண்டிய

சந்தர்ப்பம் நேர்ந்துவிட்டது. இவ்விஷயங்களெல்லாம் நம் பிரியப்படி நேரிடுகிறவையல்ல; நமது விருப்பப்படி அவற்றைச் சரிப்படுத்த நம்மால் முடியாதென்ற சங்கதி தாங்களறிந்ததே. தங்களுக்கு எவ்வளவோ உலக அனுபவமிருக்கிறது. ஆயினும் குறுக்குத் தீவில் நடக்கும் கேளிக்கை சமயத்தில் நான் தங்களையும் தங்கள் புத்திரிகளையும் எப்படியும் சந்திப்பேன். பெரும்பாலும் அங்கிருந்து திரும்பி வரும்போது உங்கள் கூடவே வரலாகும்'' என்றான்.

குலசேகரன் அவ்வாறு கூறிக்கொண் டிருக்கையில் புனிதவதி மற்றபேர் கவனிக்காதபடி தன் தமக்கையாகிய மீனாள்மேலேயே தன் நாட்டத்தை வைத்திருந்தாள். குலசேகரன் கூறிக்கொண்டிருக்கையில் மீனாளுடைய முகம் மிக்க வெளுத்து விட்டதென்றும் அவள் தன் மனதிலுண்டான அதிருப்தியையும் கிளர்ச்சியையும் அடக்கிக் கொள்வதற்காக தன் புருவங்களை நெறித்துக்கொண்டு உதடுகளை இறுக்கிக் கொண்டாள் என்பதையும் புனிதவதி நன்றாகக் கவனித்தாள். ஆனால் மீனாள் ஒன்றும் பேசவில்லை. குலசேகரன் அவள் தந்தையிடம் அவ்வாறு கூறி விடைபெற்றுக்கொண்டபின், இயற்கைப்படி அவளிடமும் தான் போய் வருவதாகக் கூறியபோது அவள் பதிலுக்கு ஒன்றும் வார்த்தையாடாமலேயிருந்து விட்டாள்.

இப்போது புனிதவதி தனக்கு மனவருத்தத்தை யுண்டாக்கும் சந்தர்ப்பம் நேரிடப்போகிற தென்பதை யறிந்துகொண்டு கலக்கத்தோடு அதை யெதிர்பார்த்த வண்ணமாகவிருந்தாள். அதென்னவெனில் இப்போது வந்திருந்த விருந்தினரனைவரும் விடைபெற்றுக்கொண்டு செல்லவேண்டிய காலம் நெருங்கி விட்டதால், இதுகாறும் தங்கள் குடும்பத்திலேயே மிக்க அன்போடு உபசரிக்கப்

பட்டு வந்த முருகப்பன் தன் தந்தையிடம் விடைபெற்றுக் கொண்டு செல்லப்போகிறான். தன் தந்தையோ அவனிடம் பேசி, அவனுக்குத் திருப்தியாய் விடையளித்தனுப்பப் போகிறதில்லையென்று அவளுக்குத் தெரியும். முருகப்பன் அவரிடம் போய் வருகிறேன் என்று கூறியபோது தைரிய நாதம்பிள்ளை, "நீ க்ஷேமமாகப் போய்வா. ஆனால் வழியில் ஒரு கன்னிகை யுன்னிடம் சந்தோஷமாகப் பேசுவதாலேயே அவள் உன்மேல் காதல் கொண்டிருக்கிறாளென்று எண்ணி விடாதே" என்றார்.

அவர் மொழிகளைக்கேட்ட முருகப்பன் மிக்க மன வருத்தமடைந்தான். தன்னை அகௌரவப்படுத்தவே யவர் அப்படிக் கூறினாரென்று அவனுக்குப் புலப்பட்டது. அதாவது ஒரு கன்னிகை தன்னிடம் தாராளமாகப் பேசுவதனாலேயே அவள் தன்னைக் காதலிப்பதாகக் கருதும் அத்தகைய அற்ப மதிப்புடையவனாக அவர் தன்னை மதித்தார் என்று அவன் மனதிற்பட்டது. அவனுக்கு மிக்க ஆத்திரம் வந்ததெனினும் புனிதவதியைக் கருதித் தன் ஆத்திரம் முழுமையும் அடக்கிக் கொண்டான்.

அதன்பிறகு அவன் சகோதரிகளை நெருங்கி அவர்களிடம் விடைபெற்றுக்கொள்ள முயன்றான். அவன் மீனாளிடம் சென்று நான் போய் வருகிறேன் என்று கூறிய போது, அவள் மனம் இளகிக் கொஞ்சம் விருப்பத்தோடு அவன் மொழிகளைக் கவனித்து விடையளித்தாள். ஆனால் புனிதத்திற்கு அவன்மேல் உண்டாகியிருந்த பட்சத்தால் அவள் கண்களில் ஜலம் ஊறியது. அதை அவள் தந்தையாகிய தைரியநாதம்பிள்ளை கூடப் பார்த்தறிந்து கொண்டார். அவர் பாதி கோபத்தோடு "என் குழந்தாய், அவன் பழைய நண்பனாகையால் அது நியாயமே யாகும். ஆனால் இனியும் நண்பனாகக் கருதப்பட

வேண்டுமென்பதை நான் விரும்பவில்லை யென்றுமட்டும். அறிந்துகொள்ளுங்கள்" என்றார்.

அச்சமயம் மெதுவாக அறையைவிட்டுச் சென்றுகொண்டிருந்த முருகப்பன் தைரியநாதம்பிள்ளையின் மொழிகளைப் பாதி கேட்டான். அவன் அதைப்பற்றி அவரிடம் பேசக் கருதி பாதி திரும்பினன். ஆனல் அப்போது புனிதம் தன் துயரத்தை யடக்க முடியாமல் கைக்குட்டையால் முகத்தை மறைத்துக்கொண்டு ஒரு புறமாக ஒதுங்கிக்கொண்டதைக் கண்டான். அதோடு அவள் தனியே தன்னிடம் கூறிய சங்கதிகளனைத்தும் ஏககாலத்தில் அவன் நினைவிற்கு வந்தது. ஆகவே அவன் ஒன்றும் பேசாமல் வெளியிற் சென்றான். அவ்வாறே மற்ற விருந்தாளிகளும் தங்கள் தங்கள் படுக்கைக்குச் சென்றார்கள். இவர்களனைவரும் மறுநாட்காலை புறப்பட்டு தத்தம் வாசஸ்தலங்களுக்குச் செல்லவேண்டியவர்கள்.

கன்னியர் இருவரும் தமது படுக்கையறைக்குச் சென்று வழக்கம்போல் ஒரே மஞ்சத்தில் படுத்துக்கொண்டார்கள் இருவருக்குள்ளும் பரஸ்பர மனஸ்தாபம் ஏற்பட்டிருக்கிறது. புனிதத்திற்கு தன் தமக்கை முன்பின் அறியாதவனும், எந்தவூரென்றும், எக்குடும்பத்தில் பிறந்தவனென்றும் அறியப்படாதவனுமாகிய குலசேகரன் என்பவன்மேல் காதல்கொண் டிருக்கிறாளே, இக்காதலால் பின்னல் அவளுக்கு என்ன தீங்குகள் நேரிடுமோ என்பதாலும், முருகப்பன் நிரபராதியாயிருக்க ஊரிலுள்ள சில மூடர்கள் கூறும் வதந்தியைக்கேட்டு நம் தந்தை அவன்மேல் வெறுப்படைந்து அவனை அவமரியாதையாய் நடத்தினல் இவளும் அப்படியே கருதி நடக்கிறாளே என்பதாலும் மீனள் விஷயத்தில் வருத்தமடைந்திருந்தாள். மீனளுக்கோ புனிதம் குலசேகரனிடம் அவநம்பிக்கை கொண்டு அவன்மேல்

வெறுப்புற்றிருக்கிறளே என்பதோடு நம்மை அலட்சிய மாய் மதித்த முருகப்பன் விஷயத்தில் விருப்பம் வைத் திருக்கிறளே யென்பதற்காகத் தன் தங்கைமேல் மன வருத்தம் கொண்டிருந்தாள்.

இருவரும் படுக்கைக்கு வந்ததும் தங்கள் மனத் துயரை யடக்கமுடியாமல் கண்ணீர் பெருக்கினர்கள். அச் சமயம் ஒருவர் துயரை யொருவர் உணர்ந்தபடியால் இரு வருக்குமிருந்த மனஸ்தாபம் மறைந்து பரஸ்பர அன்பே எப்போதும்போல் மேலெழுந்தது. இருவரும் ஒருவரை யொருவர் ஆலிங்கனம் செய்தபடியே சயனித்துக் கொண் டார்கள். புனிதம் சற்றுநேரம் கண்ணீர் விட்டபின் அவளின் துயரம் கண்ணீரால் சற்று தணிந்து விடவே அவள் உறங்கி விட்டாள்.

தன் தங்கை தன் தோள்மேல் சிரசை வைத்து நித் திரை செய்கையில் மீனுள் தன் துயரத்தோடு ஆழ்ந்த சிந் தனையிலிருந்தாள். அவள் கண்களில் நீர் துளித்துக் கொண்டேயிருந்தது. அவள் அத்தகைய ஸ்திதியிலிருக் கையில் அந்த அறையின் சாளரத்திற்கு நேராகக் கீழே யாரோ பாடும் சத்தம் அவள் செவிகளில் வீழ்ந்தது. முத லில் அவள் பைரவிகிருஷ்ணப்பன்றான் பாடுகிறனுக்கு மென்று எண்ணினுள். சற்று உற்றுக் கேட்டபோது அவனல்லவென்று தெரிந்தது. ஏனெனில் அவன் வீணை வாசிக்கிற வழக்கமில்லை. பின்னும் சற்று நேரம் உற்றுக் கேட்டபோது பாடுகிறவன் குலசேகரன் என்று தெரிந்தது. ஏனெனில் குலசேகரன் வாசிப்பது ஒருவிதமான மேல்நாட் டுப் பிடில். அம்மாதிரி இத்தேசத்தில் ஒருவரும் வாசிப்ப தில்லை. ஒருவருக்கும் தெரியவும் தெரியாது. குலசேகரன் அந்த நாடுகளுக்குச் சென்றிருந்தபோது அதை வாசிக்கக் கற்றுக் கொண்டான். அவன் பாட்டுகளில் குறிக்கப்பட்ட

இடங்களும் காட்சிகளும் பொருள்களும் அந்நாட்டிலுள்ள வைகளே. இங்கு காணத்தக்கவையல்ல.

அவன் பாடும் பாட்டின் கருத்து காதலுள்ள கன்னிகையைத் தன் காதலனைக் காண்பதற்காக தூங்காமல் விழித்துக் கொண்டிருக்கும்படி தூண்டுவது. குலசேகரன் பாடும் பாட்டு மிக்க உற்சாகமும் கேட்போர் மனம் உருகத் தக்கதாகவும், செவிக்கு இன்பம் பயக்கத்தக்கதாகவுமிருந்தது. அவனுடைய எண்ணம் மீனுள் எழுந்து வெளியில் வரும்படி செய்யவேண்டுமென்பதே. ஒருசமயம் தான் கடைசியாக அவளிடம் விடைபெற்றுச் செல்லக் கருதியிருக்கலாகும். மீனுள் தன் தங்கையை எழுப்பாமலே தான் எழுந்து வெளியில் செல்லக்கூடியதாகவிருந்தால் அவன் எண்ணம் சுலபமாகவே ஜெயம் பெற்றிருக்கலாகும். ஆனுல் அது நடக்கக் கூடாத காரியமாகவிருந்தது. ஏனெனில் புனிதம் அழுதுகொண்டே தன் ஒரு கரத்தை மீனுள் கழுத்தில் மாட்டிக் கொண்டு தன் சிரசை யவள் தோள் மேல் வைத்துக்கொண்டு படுத்திருந்தாள். ஆகையால் அவளை எழுப்பிவிடாமல் தன்னை விடுவித்துக்கொண்டு வெளிவர மீனுளால் முடியாததாகவிருந்தது. ஆகையால் அவள் எழுந்து தன் மேற்போர்வையை யணிந்துகொண்டு கீழிறங்கிச் சென்று தன் காதலனைச் சந்திப்பது ஆகாத காரியமென்றே யவளுக்குப் புலப்பட்டது. அவன் தன்னைக்கண்டு பேசவே யங்கு வந்து அம்மாதிரி பாடுகிறுனென்றுமட்டும் அவள் புத்திக்குப் புலப்பட்டது. இத்தடை யேற்பட்டதால் அவள் மனம் மிக்க கஷ்டப்பட்டது. கிடக்கட்டும், புனிதத்தை யெழுப்பிவிட்டுச் செல்லலாமெனில், புனிதத்திற்குக் குலசேகரன் விஷயத்தில் வெறுப்பிருக்கிற வரையில் தான் போய் அவனிடம் பேசுவதைப்

புனிதம் அறிவது அவளுக்குச் சற்றும் மனதிற்கு ஒப்ப வில்லை.

ஆயினும் மீனுள் சற்றுநேரம் சும்மாவிருந்து, பிறகு மெதுவாய்ப் புனிதத்தை யெழுப்பாமலே அவள் ஆலிங்கனத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள மெது வாய் முயன்று பார்த்தாள். ஆனுல் அவள் அப்படி முய லும் போதெல்லாம், புனிதம் தூக்கத்திலிருந்து தொந் தரை செய்யப்பட்ட குழந்தைகள் போல் ஏதோ கனவில் வாய் பிதற்றுகிறதுபோல் பேசிக் கொண்டு கெட்டியாக அவளைப் பற்றிக்கொண்டாள். அதனுல் அவளைப் பூரண மாய் நித்திரையினின்றும் எழுப்பிவிடாமல் நாம் வெளியில் செல்லமுடியாதென்று மீனுளுக்குப் புலப்பட்டது. ஆகை யால் மீனுள் வருத்தத்தோடு பேசாமலிருக்கவேண்டியதா யிற்று.

குலசேகரனே எப்படியேனும் அவளை வெளிவரும் படி செய்யவேண்டுமென்ற எண்ணமுடையவனுயிருந்த தால் முன்பாடிய பாட்டைவிட அவள் மனதில் அதிகமாய் உறுத்தத்தக்க வேறெரு பாட்டைப் பாடத்தொடங்கினுன். அதைப்பாடிவிட்டு அவன் மறுபடி பேசாமலிருந்தான். மீனுள் மறுபடி தன் தங்கையை விழிக்கச் செய்யாமலே தான் எழுந்து செல்ல முயன்ருள். ஆனுல் அது முடியாத காரியமாயிருந்தது. அவள் மனதில் வேறென்றும் தோன்றவில்லை. குலசேகரன் கடைசியாகத் தன்னைப்பார்க் காமலும் தன்னிடம் ஒரு வார்த்தையும் பேசாமலும் மன வருத்தத்தோடு போகிருனே யென்ற ஒரு வருத்தமே அவ ளுக்குள்ளிருந்தது.

குலசேகரனே மிக்க ஆத்திரமான குணமுடையவன், ஆனுல் தன்னுடைய பிரியத்திற் கிணங்கித் தன் குணத்தை யடக்கிக்கொண் டிருக்கிருனென்று அவள் அறிவாள்.

நாம் எப்படியேனும் இரகசியமாய் வெளியிற்சென்று முருகப்பனிடம் சண்டையிடவேண்டாமென்று அவனுக்குக் கூறலாமாவென்று அவளுக்குள் எண்ணம். அது மட்டுமல்ல "நீ யிப்போது செல்லும் நெறியினின்றும் நீங்கிவிடு. இத்தகைய சிநேகிதர்களை விட்டு விட்டு உன் வாழ்நாளின் நடக்கைகளை வேறு வழியில் திருப்பிவிடு" என்று நாம் கூறினால் அவன் பெரும்பாலும் அப்படியே செய்யலாகும். அப்படிச் செய்தால் அவனுடைய நடக்கைகள் அடியோடு மாறிவிடும். பிறகு அதனால் அவனுடைய எதிர்கால வாழ்க்கையே முற்றும் நன்னெறியில் திரும்பிவிடலாகும்" என்று கருதினாள்.

நேயர்களே ! இப்போது இந்த இரண்டு சகோதரிகளுக்கு உண்டாகியிருக்கும் வியாகூலத்திற்கும், இவர்களோடு சம்பந்தப்பட்ட முருகப்பன் குலசேகரன் இருவர் மனதிற்கும் உண்டாகியிருக்கும் வருத்தத்திற்கும் மூலகாரணம் எதுவென்று சற்று சிந்தித்துப் பாருங்கள். முதலில் முருகப்பன் அப்பெண்களிடத்தில் சினேகம் கொண்டதும், பிறகு குலசேகரன் அதே குடும்பத்தில் வந்து சேர்ந்து அதே பெண்களிடம் நட்புகொண்டதோடு மீனாள்மேல் காதல் கொண்டதுமே காரணமென்று உங்களுக்குத் தோன்றும். ஆனால் இத்தகைய சம்பவங்கள் நேர்வதற்கு எப்படி இடமுண்டாயிற்று என்பதைச் சிந்தியுங்கள். அதற்கு எது இடம் தந்ததோ அதுவே இத்தகைய மன வருத்தங்களுக்கெல்லாம் மூலகாரணமாகவேண்டும்.

எது இந்த இரண்டு புருடர்களும் அக்கன்னிகைகளுக்கு முன்பின் தெரியாதவர்களாகவிருந்தும் அவர்களிடம் தாராளமாய்ப்பேசி நட்புகொள்ள இடந்தந்தது? அது அவர்கள் நல்ல நாகரீகம் பொருந்தியதென மூடத்தனமாகக் கருதும் அவர்களுடைய ஆசாரமேயாகும்.

அதாவது ஒரு கன்னிகை அன்னிய வாலிப புருடனிடம் தாராளமாகப் பேசலாம், தனியே யுலவச் செல்லலாம், இன்னும் அவர்களிருவரும் பேசிக்கொண்டிருக்கையில் இன்னொருவர் அங்கு செல்வது நாணயமல்ல என்று கருதும் ஆசாரமே யித்தகைய துன்பங்களுக்கெல்லாம் காரணமாகும். இச்சந்தர்ப்பத்தில் இந்த இரண்டு கன்னிகைகளும் முதலில் முருகப்பனைச் சினேகனுகப் பாவித்தார்கள். பிறகு ஏதோ அற்பகாரணத்தால் அவனை வெறுத்துவிட்டார்கள். பிறகு குலசேகரன் அங்கு போய்ச்சேர்ந்தான். அவன் அவர்களுக்குச் சினேகனுய்விட்டான். சகோதரிகளில் ஒருத்தி யவன்மேல் பிரியம் கொள்ளாவிடினும் ஒருத்தி யவன்மேல் காதல் கொண்டாள்.

நேயர்களே சிநேகம், நட்பு என்பதில் இருவிதமுண்டு. அதாவது ஒரு ஆடவனுக்கும் இன்னொரு ஆடவனுக்கும் உள்ள நட்பு ஒருவிதம். அது பரிசுத்தமான அன்பைப் பொருந்தியது. ஆனல் ஒரு கன்னிகைக்கும் ஒரு ஆடவனுக்கு முள்ள நட்பு வேறு விதமானது. ஒரு கன்னிகைக்கும் ஆடவனுக்குமுள்ள நட்பு காதலாகவேயிருக்கும். ஆரம்பத்தில் அப்படியில்லாவிடினும் சீக்கிரத்தில் அவ்வாறே மாறுமென்பது உலக அனுபவம். அதனுற்றுன் நமது முன்னோர்கள் யாவும் ஆலோசனைசெய்து ஒரு கன்னிகை அன்னிய ஆடவன் முன் செல்லலாகாது, அவனேடு வார்த்தையாடலாகாது என்று விதி ஏற்படுத்தினர்கள். ஆனல் அத்தகைய அரிய விதிகளை யலட்சியம் செய்யும் அறிவிலிகள் இக்காலத்தில் நம்நாட்டில் அதிகமாய் முளைக்கிருர்கள் என்பது மிக்க விசனிக்கத் தக்க விஷயமே. மேல் நாட்டாருடைய இந்த ஆசாரத்தால் நேரும் தீமைகள் அவர்களுக்குச் சகஜமாய் விட்டது. நம்மவர்கள் அதன் தீமைகளை யறிந்தும் பின்பற்ற நினைப்பது மிக்க

வெட்கக்கேடான விஷயமேயன்றோ. இத்தகைய மடையர்கள் மிருகங்களே யாவர்.

---

## 36-வது அத்தியாயம்.

மீனாள் நாம் எப்படி நமது தங்கையைத் தூக்கத்திலிருந்து எழுப்பாமலே தப்பித்துக் கொண்டு போய்க் குலசேகரனைக்கண்டு பேசலாம் என்று சிந்தித்துக் கொண்டே பன்முறை அவள் கரத்தைத் தன் கழுத்திலிருந்து விலக்கிவிட முயன்று பார்த்தாள். அது முடியவில்லை. கடைசியில் மிக்க தந்திரமாய் ஒரு முயற்சிசெய்யத் தொடங்கினாள். அச்சமயம் சாளரத்தின் கீழ் முன்பு குலசேகரன் பாடிக்கொண்டிருந்த விடத்தில் இப்போது இருவர் பேசும் சந்தடியைக் கேட்டுத் திடுக்கிட்டு உற்றுக் கேட்டாள். குலசேகரனும் முருகப்பனும் தீக்ஷணியமாகப் பேசுவதுபோல் கேட்டது. பின்னும் கவனமாகக் கேட்ட போது அவர்கள் தங்கள் பேச்சு யாருக்கும் கேட்கலாகாதென்ற நோக்கத்தோடு வார்த்தைகளை யடக்கிப் பேசுகிறார்கள் என்று புலப்பட்டது.

முன்பு படுக்கையைவிட் டெழுந்து செல்லவேண்டும் என்று அவளுக்கிருந்த அவாவோடு இப்போது பீதியும் சேர்ந்து கொண்டது. ஆகையால் துணிகரமாகத் தன் தங்கையின் கரத்தைத் தன் கழுத்திலிருந்து மெதுவாகக் கழற்றி விட்டாள். புனிதம் கனவில் பேசுபவள் போல் இரண்டொரு வார்த்தைகள் கூறினாளேயன்றி விழித்துக் கொள்ளவில்லை. மீனாள் சாளரத்தினருகில் சென்று பார்ப்பதற்காகத் துரிதமாகச் சந்தடி செய்யாமலே தன் மேல் உடைகளை யெடுத்தணிந்துகொள்ளத் தொடங்கினாள். ஆனால் அதற்குள் வெளியில் இருவர் பேசுவதாய்க் கேட்ட

சத்தம் சச்சரவிடுவதுபோல் கேட்டது. உடனே இருவர் சண்டையிடுவது போலும் கடைசியில் யாரோ வேதனையாய்ச் சத்தமிடுவதுபோலும் கேட்டது.

இக்கடைசிச் சத்தத்தால் ஏதோ துஷ்டத்தனம் நடந்திருக்கிறதென்று அவளுக்குத் தெளிவாய்த் தெரிந்துவிட்டது. அவள் உடனே பாய்ந்து சாளரத்தருகில் சென்றாள். சாளரத்தின் கீழிருப்பவர்கள் சுவரோரத்திலிருந்ததால் அவள் சாளரத்தருகில் நின்று சிரசை வெளியில் நீட்டிப் பார்த்தாலன்றி அவர்களைக் காணமுடியாது. அவள் சாளரக் கதவைத் திறக்க முயன்றபோது அதன் தாழ்ப்பாள் துருபிடித்திருந்ததால் சீக்கிரத்தில் கழற்ற முடியவில்லை.

கடைசியில் மீனாள் அச்சாளரத்தின் கதவைத் திறந்து வெளியில் சிரசை நீட்டி எட்டிப்பார்த்தபோது, அங்கு அவளுக்குப் பயமுண்டாகும்படி சந்தடியை யுண்டாக்கிய உருவங்களைக் காணோம். ஆனால் ஒரு உருவம் அங்கிருந்த நிலவுவெளிச்சத்தைக் கடந்து செல்வதுபோலவும், பிறகு அது அங்கிருந்த ஒரு மூலையில் திரும்புவதுபோலும் தோன்றியது. மீனாள் உற்றுப் பார்த்தபோது ஒரு மனிதன் இன்னொருவனைத் தோள்மேல் தூக்கிக்கொண்டு செல்வதுபோல் தெரிந்தது. மீனாளுக்கு முதலில் குலசேகரன் முருகப்பன் இவர்கள் குரலே சச்சரவிடுவதென்று அறிந்ததே மிக்க திகிலுண்டாய்விட்டது. பிறகு இருவரும் சண்டை யிடுகிறார்களென்று அறிந்ததே யவள் மனோவேதனை அதிகமாய் விட்டது. பிறகு ஒருவர் வேதனையோடு சத்தமிட்டதைக் கேட்டதே அவள் மனோ வேதனை மிக்க அதிகமாய் விட்டது. அத்தகைய வேதனையிலிருப்பவள் இப்போது ஒருவர் மற்றொருவரைத் தூக்கிச் செல்லும் காட்சியைக் கண்டபோது அவள் மனவருத்தம் எப்படியிருக்குமென்பதை யிதை வாசிப்போரே யூகித்துணரவேண்டும்.

அச்சாளரம் பூமியிலிருந்து சுமார் ஆறு ஏழு அடி யுயரமேயிருந்தது. மீனாள் துணிகரமாய் அச்சாளரத்திலிருந்து கீழே குதிக்கச் சற்றும் அஞ்சவேயில்லை. அவள் அவ்வாறு குதித்ததும் தான் கண்ட உருவம் சென்ற வழியே துரிதமாய்ச் சென்றாள். ஆனால் அவ்வுருவங்கள் திரும்பி மறைந்த மூலையில் வந்தபோது, அங்கிருந்து அவர்கள் எத்திக்கில் சென்றார்களென்று கண்டறிய அவளால் முடியவில்லை. தான் முயற்சி செய்தாலும் காரியம் கைகூடாதென்றே யவள் புத்திக்குப் புலப்பட்டது. ஏனெனில் அந்த மாளிகை பிரம்மாண்டமான மாளிகை. அதைச் சுற்றி ஓரங்களில் சாமான் கிடங்குகளும், தானியம் சேமித்து வைக்கப்படும் களஞ்சியங்களும், குதிரைகள் கட்டப்படும் இடங்களும், வேலைக்காரர் காவலர் இவர்களுடைய வாசஸ்தலங்களும் ஆங்காங்கு இருக்கின்றன. இவையன்றி அனேகம் உயரமும் செங்குத்துமான கற்பாறைகள் கடற்கரை வரையில் நிறைந்திருக்கின்றன. அவைகளில் சந்துகளும் குகைகளும் அனேகமிருக்கின்றன. மாளிகையைச் சுற்றிலும் அனேகம் மூலைகளும் முடுக்குகளும் இருக்கின்றன. அவள் கண்ட உருவங்கள் அவற்றில் ஒன்றில் மறைந்துகொண்டால் கண்டு பிடிப்பது கூடாத காரியம். ஒரு வினாடி சிந்தித்தபோது இன்னும் அவர்களைத் தேடிச்செல்வது முடியாத காரியம் என்று மீனாளுக்குப் புலப்பட்டது. அவளுடைய இரண்டாவது யோசனை யென்னவெனில் கூச்சலிட்டு வீட்டிலுள்ளவர்களை யெழுப்பலாமாவென்பதே அப்படிச் செய்வதானால் என்னென்று கூறுவது? யாரைப்பற்றி கூறுவது? பேசாமலிருக்கலாமென்றாலோ தான் கண்ட இருவரில் ஒருவர் காயம் பட்டோ வேறு விதமாகவோ ஆபத்தான நிலைமையிலிருப்பதாகத் தெரிகிறது. அது பிராணாபத்தான நிலைமை

யாக விருந்தாலும் இருக்கும். அப்படி யவன் பிராணன் நீங்காதிருந்தால் இப்போது நாம் அவனுக்குச் சிகிச்சை செய்து அவனைக் காப்பாற்ற அவகாசமிருக்குமல்லவோ. இத்தகைய யோசனையின்மேல் கடைசியில் அவள் சத்த மிட்டுக் கூவவிருந்தாள். அச்சமயம் பைரவி கிருஷ்ணப்பன் தான் தங்கியிருந்த இடத்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருப்பதைக் கண்டாள். அவன் பாட்டுப் பாடிக் கொண்டே வந்தான்.

அவன் பாடியபாட்டின் கருத்து தனக்கே தன் சந்தர்ப்பத்திற்கு தக்க எச்சரிக்கை கூறுவதுபோலிருந்தது. அது தெய்வத்தினிடத்தினின்று வரும் எச்சரிக்கை போலிருந்தது. அத்தீவில் அக்காலத்தில் மூடக்கொள்கைகள் அதிகம். அத்தகைய விடத்திலிருந்து அவற்றை நேரில் கண்டவர்களையன்றி மற்ற பேர்களுக்கு அதை நம்ப மனம் வராது.

மீனுள் "சரி சரி. நான் பேசாமலிருக்கிறேன். என் வாயை மூடிக்கொள்கிறேன்" என்று கூறினுள். அம்மொழிகளைக் கேட்டதே பைரவி கிருஷ்ணப்பன் "யார் அங்கே பேசுகிறவர்?" என்று அச்சத்தோடேயே கேட்டான். ஏனெனில் அவன் அன்னிய நாடுகளில் சஞ்சாரம் செய்தவரையில் தன் மூடக்கொள்கைகளை விட்டவனல்ல. மீனுள் மிக்க பீதியும் கலக்கமும், இம்மூடக் கொள்கைகளில் நம்பிக்கையும் உடையவளானபடியால், முதலில் அவளால் வாய் பேசவே முடியவில்லை. கிருஷ்ணப்பன் வீட்டின் நிழலில் ஒரு பெண் உருவம் நிற்பதைக் கண்டான். அவன் இவளை யாரென்றறியாமல் கலவரமடைந்தான்.

மீனுள் மிக்க தாழ்ந்த குரலாக "கிருஷ்ணப்பிள்ளை நான்முன்" என்றுள். கிருஷ்ணப்பிள்ளை அதைக் கேட்டதே அவன் பீதியனைத்தும் வியப்பாய் மாறியது. அவன்

"என்ன நீயா? மீனாள் நீயா? இந்த நிலவு வெளிச்சத்தில் அதிலும் அமரபட்ச நிலவில் உன்னை இங்கு சந்திப்பதாய் நான் எதிர்பார்க்கவேயில்லை. யார் தான் எதிர் பார்ப்பார்கள். ஆனால் நான் பார்த்ததுபோல் நீயும் அவர்களைப் பார்த்திருப்பாய் என்று நினைக்கிறேன். நீ அவர்களைப் பின் தொடர்ந்து வந்தது மிக்க தைரியமான காரியமே" என்றான்.

மீனாள்:—"பார்த்தாயா? யாரைப் பின் தொடர்ந்தது?" என்று கேட்டாள்.

ஏனெனில் இரண்டு உருவங்கள் சென்றதை மட்டும் அவள் கண்டாளேயன்றி வேறு ஒரு விஷயமும் அவளுக்குத் தெரியாது.

அவள் கேட்டதற்கு கிருஷ்ணப்பன், "வானத்தில் ஜொலித்தச் சவத்தீபங்கள் நல்ல சகுனமுடையவையல்ல. நான் நெடுநேரம் அவற்றைத் தொடர்ந்து பார்த்தேன். ஆனால் அவை மறைந்து விட்டன. ஒரு படகு துறை முகத்தை நோக்கிச் சென்றதை நான் பார்த்தேன். யாரோ அப்படகில் செல்வதுபோல் தோன்றியது. இந்த மீன் வேட்டைக்குச் சென்றவர்கள் க்ஷேமமாகத் திரும்பி வந்தால் நலமாக விருக்குமென்று கருதுகிறேன். பிச்சிமலை நாகம்மாள் மனவருத்தத்தோடு நம்மை விட்டுப் பிரிந்து சென்றாள். அதோடு இந்தச் சவ வெளிச்சங்கள். கடவுள் நம்மைக் காப்பாற்றவேண்டும். நான் ஒரு வயோதிகன். எல்லாருமே க்ஷேமமாகவிருக்க வேண்டுமென்று கருதுகிறவன். ஓ! மீனாள்! உன் அழகான முகத்தில் நீர் வடிவதேன்? அடடா! இந்த நிலவு இரவில் உன் கால்களில் பாதரட்சைகளைக் கூடக் காணேமே. ஓ கடவுளே! ஏன் பேசாமலிருக்கிறாய்? கோபமா?" என்று கூறிவிட்டு அதற்கும் அவள் பேசாமலிருப்பதைக்கண்டு "இதென்ன முட்டாள் தனம். சிறு

பிள்ளாய்! நான் உனக்கு தந்தையாக விருக்கக் கூடிய வய துடையவன். நான் எப்போதும் உன்னை என் குழந்தை போல் நேசிக்கிறவன். நீ இதை மனதில் வைத்து என்னிடம் நடந்துகொள்ளவேண்டும்'' என்றான்.

அவன் கடைசியில் சற்று கோபமாகப் பேசினாலும் அதுவும் அன்பு பொருந்திய வார்த்தைகளாகவேயிருந்தன. மீனாள் அவனைச் சிறு வயது முதலறிந்தவள். ஆகையால் அவனிடம் பேசத்துணிந்து "நான் கோபமடையவில்லை. நீ எவ்விதச் சந்தடியும் கேட்க வில்லையோ? நீ யொன்றையும் காணவில்லையோ? அவர்கள் உன்னைக் கடந்து சென்றிருக்கவேண்டும்'' என்றாள்.

கிருஷ்ணப்பன் "அவர்கள்! யார்? நீ யவர்கள் என்பது யாரை? அந்தச் சவத்தீபங்களையா? இல்லை. அவை என் எதிரில் செல்லவில்லை. உன் பக்கமாகவே சென்றிருக்கவேண்டும். அவைகள் தங்கள் சோதியால் உன்னைப் பயப்படுத்திவிட்டதுபோல் தெரிகிறது. ஏனெனில் உன் முகம் வெளுத்திருக்கிறது. போதும் மீனா! வா வா! இந்த நடு இரவில் நடப்பது என் போன்றவர்களுக்கே தகும்'' என்று கூறிக்கொண்டே அங்கிருந்த கட்டிடத்தின் பக்கத்திலிருந்த ஒரு கதவைத் திறந்து, நீ எத்தகைய மெல்லிய உடையணிந்திருக்கிறாய், நீ இத்தீவின் குளிர் காற்றில் இத்தகைய வேளையில் வெளிவராமல் மிக்க ஜாக்கிரதை யெடுத்துக்கொள்ளவேண்டும். ஏனெனில் அக்காற்று நறுமணத்திற்குப் பதிலாக வியாதியையே கொண்டுவரும். இதோ பார் ஒரு வித்வான் கூறுகிறார்'' என்று ஒரு பெரிய கவியைக் கூறத்தொடங்கினான்.

பைரவி கிருஷ்ணப்பன் அத்தகைய மேற்கோள்களைக் கூறத்தொடங்கும்போது அவனுக்கு இடம் காலம் ஒன்றுமே தோன்றாது. அச்சங்கதியை யுணர்ந்த மீனாள் பக்குவ

மாய் அவன் கூறுவதற்கு இடையிற் புகுந்து "சற்று முன்னே கடலில் சென்ற அப்படகில் இருந்த மனிதர் யாரையும் நீ காணவில்லையோ?" என்றாள்.

கிருஷ்ணப்பன் "என்ன முட்டாள் தனம்! நான் எப்படிப் பார்ப்பேன்? அப்போது இருந்த வெளிச்சத்தில் அந்தத் தூரத்தில் அது ஒரு படகு என்று மட்டும் எனக்குத் தெரிந்ததேயன்றி வேறொன்றும் தெரியவில்லை" என்றான்.

மீனாள் கலவரத்தோடு தான் கூறுவது இன்னதென்று அறியாமலே "ஆயினும் அதில் யாரேனும் மனிதர் இருந்திருக்கவேண்டும்" என்றாள்.

கிருஷ்ணப்பன்:—"ஆம். கட்டாயமாக அப்படகில் யாரேனும் மனிதர் இருக்கவே வேண்டும். இன்றேல் படகுகள் தாமே கடலில் ஓடுவதில்லை. இருக்கட்டும் வாவா! இதெல்லாம் முட்டாள் தனம். "போய்ப்படுத்துக் கொள்ளலாம், படுத்துக் கொள்ளலாம்" என்றான்.

மீனாள் மிக்க அயர்வோடு மெதுவாய்ப் பல சந்துகளின் வழியாய்ச் சென்று தன் படுக்கையறைக்குள் சென்றாள். முன்பு சாளரத்தின்கீழ் பாடியவன் குலசேகரன் தான் என்பது மட்டும் அவளுக்கு நிச்சயமாய்த் தோன்றியது. ஏனெனில் அவன் குரலும் பாட்டும் அவளுக்கு நன்றாகத்தெரியும். அதுமட்டுமல்ல, குலசேகரனோடு கோபமாய் வார்த்தையாடியவன் முருகப்பனென்பதும் அவள் மனதிற்பட்டது. அந்த உணர்ச்சி அவள் மனதில் அதிகமாக உறுத்தியது. அந்தோ! அச்சச்சரவின் முடிவில் ஒருவர் வேதனையோடு கூவியதும் அவள் மனதில் அதிகமாய் நிலைத்து உறுத்திக்கொண்டிருந்தது. அவர்களில் ஜெயமடைந்தவன் தோல்வியடைந்தவனைத் தூக்கிக் கொண்டு போனதும் அவளுக்குத் தெரிந்திருக்கிறது.

யாவும் சேர்ந்து ஏதோ ஆபத்து நேர்ந்திருக்கிறதென்று எண்ணவேண்டியதாய், ஏன் கொலை நடந்திருக்கிறதென்று கருத வேண்டியதா யிருந்தது. அப்படியாயின் இருவரில் யார் இறந்தவர் யார் வெற்றி பெற்றவர் ? இக்கேள்விகள் மீனுவின் மனதை வாதித்தன. ஆனால் அவற்றிற்கும் அவள் மனதிலிருந்தே காரணத்தோடு விடையும் கிடைத்தது. குலசேகரனுடைய நடக்கையும், அவனுடைய ஆத்திரம், துணிகரம், கொலைசெய்வதிற் பழக்கம் முதலிய யாவற்றையும் தான் அறிந்திருக்கிற வரையில் நோக்கினால் அவனே ஜெயமடைந்தவனாக விருக்க வேண்டு மென்று அவளுக்குத் தோன்றியது. அப்போது முதலில் தன்னை யறியாமலே அவள் மனதில் ஒருவித ஆறுதல் தோன்றியது. தன் காதலனாகிய குலசேகரனுக்கு ஒரு ஆபத்துமில்லையென்ற உணர்ச்சியாலேயே அந்த ஆறுதல் தோன்றியது. ஆனால் மறுவினாடியே யது மாறிவிட்டது. இப்போது தன் காதலன் குற்றவாளியாய் விட்டான் என்ற எண்ணம் ஒன்று, அதோடு தன்சகோதரி முருகப்பனுக்கு ஆபத்து நேர்ந்தது என்பதை யறிந்தால் தீராத்துயரமடைவாள் என்பதொன்று. இந்த இருதுயரமும் அவள்மனதில் மிக்க வேதனையை யுண்டாக்கின. அவள் “ஓ என் தங்கையே ! நீ சத்தியத்திலும், களங்கமற்ற தன்மையிலும், நேர்மையான நடக்கையிலும் என்னிலும் எவ்வளவோ மேலானவளாயிற்றே. உனக்கு இத்தகைய தீராத் தீங்கு நேரவேண்டுமோ ! ஓ கடவுளே” என்று தனக்குள்ளாகவே சிந்தித்துக்கொண்டு தன் அருகில் படுத்திருந்த தங்கையை, அவள்மே லுண்டான இரக்கத்தின் மிகுதியால் கட்டியணைத்துக் கொண்டாள்.

மீனுவின் கரங்கள் தன் மேல் பட்டதால் புனிதவதி

திடுக்கிட்டவள்போல் விழித்துக்கொண்டு " ஆ அக்கா ! நீயா, உன்கரங்கள் தானே யென்மேல் போடப்பட்டவை? ஏனெனில் நானொரு கனவுகண்டேன். நமது பைரவிகிருஷ்ணப்பிள்ளை எங்கோ ஒரு தேசத்தில் மயானக்குழியில் இறந்தவருடைய தேகத்தை யப்படியே பதனம்பண்ணி வைக்கிறார்கள் என்று கூறியிருக்கிறாரல்லவா. நான் அத்தகைய ஒரு சவக்குழியினருகில் உட்கார்ந் திருக்கிறேன். அச்சமயம் குழியிலிருந்த அச்சவம் என்பக்கத்தில் படுத்திருப்பதுபோ லிருந்தது. மறுவிநாடி அது என்னை யணைத்துக் கொண்டதுபோ லிருந்தது. ஆ உன் கரங்கள் தான் இப்படிச் சில்லென் றிருந்தது. ஆம் ஆம் நீ ஏதோ வியாதியுற்றிருக்கிறாய். என்ன உனக்கு ? அக்கா ! என்ன தான் சங்கதி கூறு. நாகம்மாள் மறுபடி யுன்னிடம் வந்தாளா ? நான் உதவிக்கு நமது வீட்டுக் காரியஸ்தியைக் கூப்பிடுகிறேன்" என்றாள்.

மீனாள்:—" ஓ ஓ ! எனக்குத் தேகத்தில் அப்படிப்பட்ட வியாதியொன்றுமே யில்லை; எனக்கு மனிதர் மருந்தளித்துச் சுகப்படுத்தக் கூடிய வியாதியொன்றுமே யில்லை. நாகம்மாள் என்னிடம் வரவில்லை. என்வியாதியை யவளும் கூறமுடியாது. கடவுள் யாவருக்கும் மேலானவர். அவரே நமக்குநேரும் தீமையை நன்மையாய் மாற்றக்கூடியவர். ஆகையால் நாம் அவரைப் பிரார்த்திப்போம்" என்றாள்.

அதன்மேல் இருவரும் கடவுளைச் சற்றுநேரம் தொழுதார்கள். பிறகு நித்திரைசெய்ய முயன்றார்கள். அவர்களுடைய மனதிலிருந்த வியாகூலம் சற்றுநேரம் அவர்கள் நித்திரைக்குத் தடையாயிருந்தது. அவர்களில் மீனாள் மனதிலேயே அக்கலக்கம் நெடுநேரம் இருந்தது. கடைசியில் அவளும் உறங்கிவிட்டாள்.

அத்தீவி லிருந்தவர்களில் பெரும்பாலோர் மீன்வேட்டைக்குச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் க்ஷேமமாய் வருவார்களா வென்று அவர்களின் மனைவியர் மக்கள் சகோதரசகோதரிகள் அனைவரும் அவர்களைப் பற்றியே கவலையாக விருக்கிறார்கள். அன்றுமாலை வானம் இருந்த ஸ்திதியை நோக்கி பைரவி கிருஷ்ணப்பன் இந்த இரவு புயற் காற்றடிக்கலாகும் என்று கூறியிருந்தான். அந்தப்படியே இரவு காற்றடித்துக் கொண்டே யிருந்து கடைசியில் விடியற்காலம் புயற்காற்றடிக்கத் தொடங்கியது. காற்றுமழையின் சத்தத்தைக் கேட்டதே கடலோர மிருக்கும் குடிசையிலுள்ள மாதர்க ளனைவரும் தங்கள் மக்களையும் சுற்றத்தாரையும் நித்திரையினின்று எழுப்பி, அச்சமயம் ஆழ்ந்த கடலில் ஆபத்தில் சிக்கியிருக்கும் தங்கள் கணவர்களையும் சகோதரர்களையும் சுற்றத்தாரையும் காப்பாற்றும்படி ஆண்டவனைப் பிரார்த்திக்குமாறு கூறினார்கள்.

வசந்தமாளிகையில் சாளரங்க ளெல்லாம் தடதட வென்று சத்தித்தன. புகைக்கூண்டுகளி லெல்லாம் காற்று நுழைவதால் பயங்கரமான சத்தமுண்டாகியது. கட்டிடத்தின் மேல் பாகங்களிலுள்ள உத்திரங்களெல்லாம் கிறுக்கிட்டுச் சத்தித்தன. ஆனால் தைரியநாதம் பிள்ளையின் புத்திரிகள் மட்டும் வெள்ளைக் கற்சிலைகள்போல் அசையாது நித்திரை செய்தார்கள். கடைசியில் புயற்காற்றடங்கியது, பொழுதும் விடிந்தது; பகற்காலத்தின் அரசனாகிய ஆதித்தனும் தன் கிரணங்களை வீசிக்கொண்டு புறப்பட்டான். மீனாள் இரவு உண்டான மனக்கலக்கத்தால் ஆயாசமடைந்து செய்த நித்திரையினின்றும் திடுக்கிட் டெழுந்தாள். தான் பின்னால் கேட்ட சந்தடியனைத்தும் மனக்கலக்கத்தால் உண்டானதாக்குமென்றே கருதினாள். சற்று சிந்தித்தபின் கடைசியில் "கிருஷ்ணப்பனை யழைத்துக் கேட்

போம். அச்சமயத்தில் அவன் விழித்துக்கொண் டிருந் திருப்பான்" என்று கூறிக்கொண்டே படுக்கையி னின் றும் துள்ளியெழுந்தாள்.

மீனாள் அவ்வாறு படுக்கையினின் றெழுந்து கீழே தரையில் நின்றதும் புனிதம் "ஓ அக்கா! அய்யோ கடவுளே! உன் பாதங்களில், கணுக்கால்களில் என்ன? காயம்பட்டதா?" என்றாள்.

மீனாள் குனிந்து தன் பாதங்களையும் கணுக்கால்களையும் நோக்கினாள். உடனே மிக்க வியப்படைந்தாள். ஏனெனில் அவள் பாதங்களில் ஒன்றில் சிவந்த இரத்தம் படிந்து உலர்ந்திருந்ததைப் பார்த்தாள். அவள் புனிதத்திற்கு விடையளியாமலே ஆத்திரத்தோடு சாளரத்தருகில் ஓடி அதற்கு நேராகவெளியில் இருக்கும் புல்தரையை நோக்கினாள். ஏனெனில் அங்கிருந்துதான் அந்த இரத்தக்கறைத் தன் காலில் பட்டிருக்க வேண்டுமென்று அவள் மனதிற் பட்டது. ஆனால் அந்தவிடத்தில் வானத்திலிருந்து பெய்த மழையோடு வீட்டில் மேலிருந்து விழுந்த மழைநீரும் சேர்ந்து அங்கிருந்த கறைகளை யெல்லாம் அடித்துக் கொண்டு போய்விட் டிருந்தன. அதாவது முன்பு அங்கு இரத்தக்கறை யிருந்திருந்தால் மழையால் கழுவப்பட் டிருக்கவேண்டுமென்றே கருதவேண்டியதா யிருந்தது. ஏனெனில் இரவு அத்தகைய மும்முரமான மழைபெய் திருக்கிறது. அங்கிருந்த புற்களின்மேல் மழைத்துளி வீழ்ந்து வைரங்கள் போல் ஜொலித்துக் கொண்டிருந்தன.

மீனாள் திகிலோடும் மனக்கலக்கத்தோடும் நன்றாகத் தன் கண்களைத்திறந்து தரையை யுற்றுநோக்கிக்கொண் டிருக்கையில், புனிதம் அவளைப் பற்றிக்கொண்டு குனிந்து பார்த்தபடி "உனக்கு எப்படி எப்போது காயம்பட்டது?" என்று கேட்டுக்கொண் டிருந்தாள்.

மீனாள் “ ஒரு கண்ணாடித்துண்டு என் காலில் பட்டு விட்டது. அப்போது அது எனக்குக் கொஞ்சம் கூடத் தெரியவில்லை. இபபோது நீ கூறியபின்பே தெரிந்தது ” என்றாள்.

**புனிதம்:**—“ அப்படி யிருந்தும் எவ்வளவு இரத்தம் வடிந் திருக்கிறதுபார். காயத்தை நீ யலட்சியமாகக் கருது வது அதிக கெட்டதாகவேயிருக்கும். அதையுடனே கழுவவேண்டும் ” என்று கூறிக்கொண்டே ஒரு நனைத்த சீலையை யெடுத்துக் கொண்டு சென்றாள்.

மீனாள் பார்த்தாள். இப்போது பேசாம லிருந்தால் அந்த இரத்தம் தன் தேகத்திலிருந்து வந்ததல்ல வென்ற உண்மை வெளியாய்விடும், பிறகு பலவிதச் சந்தேகங்க ளுக்கு இடமுண்டாகிவிடும். எப்படியெனில் தான் கூறியது பொய் என்று தெரிவதாலேயே ஏதோ விசேஷசம்பவம் நடந்திருக்கிற தென்றும் அதைத் தான் மறைக்கப் பொய் கூறியதாகவும் தெரிவதோடு தான் அதில் சம்பந்தப்பட் டிருப்பதாகவும் நன்றாகத் தெரிந்துவிடும். ஆகையால் புனி தம் அன்போடு செய்யவந்த உதவியை மறுத்து விட்டாள்.

அதைக்கண்ட புனிதம் பாபம் மிக்க வருத்தமடைந் தாள். தான் மனமறிந்து மீனாளுக்கு ஒரு குற்றமும் செய்ய வில்லை. ஆகையால் இப்போதவள் தன் உதவியை மறுத் ததைக் கண்டதும் திடுக்கிட்டு மிக்க வியப்போடு இரண்டு மூன்றடிகள் பின்னிடைந்து, மிக்க வியப்பும் மனவருத்த மும், கொஞ்சம் வெறுப்புமான பார்வையோடு தன் தமக் கையை யுற்று நோக்கினாள். பிறகு அவளைநோக்கி “அக்கா! நமக்குள் என்ன நேர்ந்தாலும் நாம் ஒருவருக் கொருவர் கொண்டிருக்கும் பரஸ்பர அன்பில் குறைவு நேரலாகா தென்று கடந்த இரவுதான் தீர்மானித்துக்கொண்டோம்” என்றாள்.

மீனாள் "இரவிற்கும் பகலிற்கும் இடையில் எவ்வளவோ விசேஷங்கள் நேரிடலாகும்." என்றாள். ஆனால் அவ்வார்த்தைகள் சாதாரணமாக அவள் மனதினின்றும் வந்தவையல்ல - அச்சமயத்திற்கு அவசியமானபடி பல வந்தத்தால் வெளிவந்தவையே.

புனிதம்:—"உண்மையாகவே அத்தகைய இரவில் எவ்வளவோ நேரிடலாகும் தான். ஏனெனில் அதோ பார்! அத் திருப்பத்தி லிருந்த சுற்றுச்சுவர் அடியோடு வீழ்ந்துவிட் டிருக்கிறது. ஆயினும் எத்தகைய காற்றேனும் மழையேனும் நமது அன்பைக் குறைக்க முடியாது" என்றாள்.

மீனாள்:—"ஆனால் அதை வேறு ... மாதிரியாய் மாற்றக் கூடிய சம்பவம் நேரிடும்" என்றாள்.

அவள் கூறியதில் மற்ற வார்த்தைகள் சரியாய்ச் செவிப்புலனுக்கு விளங்கவில்லை. அவள் அவ்வாறு கூறிக் கொண்டே தன் பாதத்திலும் இடது கணுக்காலிலும் பட்டிருந்த இரத்தக் கறையைத் தானே துடைத்து விட்டாள்.

தூரத்தி லிருந்த எதையோ பார்த்துக் கொண்டிருந்த புனிதம் தனக்கும் தன் தமக்கைக்கும் எப்போதும்போல் பரஸ்பர அன்பு நிலைத்திருக்கும் வண்ணம் பக்குவமாய்ப் பேச முயன்றாள். மீனாள் சமயத்தில் அவசரப்பட்டு கடுமையாய்ப் பேசிவிட்டு பின்னால் வருந்தும் குணமுடையவள். ஆனால் புனிதவதியோ எப்போதும் சாந்தத்தோடு யாவர் மனமும் களிப்படையுமாறு வார்த்தையாடும் உயர்ந்த குணமுடையவ ளாதலால் யாவரையும் மன்னிக்கும் பெருந்தன்மை யுடையவள்.

## 37-வது அத்தியாயம்

மீனாள் தன் தமக்கையை நோக்கி, "ஆம்; நீ கூறுவது உண்மையே. அதனாற்றான் இன்னொருவர் அதற்குச் சிகிச்சை செய்ய வேண்டியது அவசிய மென்று நீ கருதினாய். நான் இங்கிருந்து பார்ப்பதற்கு அக்காயம் சற்றும் தெரிய வில்லையே" என்றாள்.

மீனாள்:—வெளிக்குத் தோன்றா திருப்பவையே மிக்க கொடிய காயங்கள். உனக்கு நிச்சயமாய் என்காலில் இருக்கும் காயம் தெரிகிறதா?

புனிதம் தன் தமக்கைக்கு மனம் திருப்தியாகுமாறு பேசவேண்டுமென் றெண்ணிக்கொண்டு "ஆம் தெரிகிறது, சிறியகாயம் தெரிகிறது. ஆ! இப்போது நீ யுன் காற்சட்டையை யணிந்து கொண்டதால் மறைந்து விட்டது." என்றாள்.

மீனாள்:—"உண்மையில் உனக்கு ஒன்றுமே தெரியாது. ஆனால் அதற்குத்தக்க காலம் வரும்; அப்போது சீக்கிரத்திலேயே யாவும் நன்றாகத்தெரியும், யாவும் பூரணமாக வெளிவரும்" என்றாள்.

அவ்வாறு கூறிக்கொண்டே மீனாள் தன் உடைகளைச் சரியா யணிந்து கொண்டு தன் தங்கையை யழைத்துக் கொண்டு காலைப்போசனம் அருந்தும் அறைக்குச் சென்றாள். அங்குசென்றதும் அங்கிருந்த விருந்தாளிகளின் மத்தியில் உட்கார்ந்தாள். ஆனால் அவள் முகம் மிகவும் வெளுத்து, விகாரமடைந் திருந்ததோடு, அவள் பாவனையும் வார்த்தைகளும் யாவும் மிகக் கலக்கமான மாறுதலடைந் திருந்தன.

அவள் நிலைமையை யங்குவந்திருந்த விருந்தினர் அனைவரும் கவனித்தார்கள். அவள் தந்தையாகிய தைரிய

நாதம்பிள்ளையும் அவள் நிலையைக்கண்டு மிக்க மனக்கலக்க மடைந்தார். அங்கிருந் தவர்களுக் கெல்லாம் அவளுக் குண்டாகி யிருக்கும் கலக்கம் மனோசம்பந்த மானதே யன்றி தேகசம்பந்தமானதா யிராதென்று அறிந்து கொண்டார்கள். ஆகையால் அவர்கள் தத்தமக்கு மனதில் தோன்றியபடி பலவிதமாகப் பேசிக்கொண்டார்கள். சிலர் இவளுக்கு ஏதோ கண் திருட்டிபட் டிருக்கவேண்டு மென்று பேசிக் கொண்டார்கள். சிலர் இவள் விஷயத்தில் பிச்சிமலை நாகம்மாளைச் சம்பந்தப்படுத்திக் குசு குசு வென்று அச்சத்தோடு பேசிக்கொண்டார்கள். சிலர் "இவள் அக்குலசேகரன் போய்விட்டதால் தான் இத்த கைய வியாகூல மடைந்திருக்கிறாள். ஆயினும் முன்பின் னறியாத ஒரு கடலோடிப் பயலுக்காகவா ஒரு மரியாதை யான வமிசத்தில் பிறந்த கன்னிகை யிவ்வளவு மனக்கலக்க மடைவது" என்று பேசிக்கொண்டார்கள்.

அவ்வாறு பேசிக்கொண்டவர்களில் குலசேகரனிட மிருந்து பரிசாக விலையுயர்ந்த வஸ்துக்களைப்பெற்ற பாப் பம்மாளும், இராமாபாய் சீமாட்டியுமே முதன்மையான வர்கள். அம்மாதர்களின் இழிகுணம் அத்தகையதாக விருந் தது. இராமாபாய் "எனக்கு இக்குடும்பத்தில் உண்டான நட்பு இப்பெண்களின் தாயார் காலத்தி லுண்டானது. அவள் நம்மைப்போல் சரியான வடநாட்டு ஆசாரமுடை யவள்" என்று பாப்பம்மாளிடம் கூறினாள்.

பிறகு இராமாபாய் சீமாட்டி பாப்பம்மாளிடம் கண் களைச் சிமிட்டிக்கொண்டு "இந்தக் குடும்பத்தார் தங்களை மிக்க உயர்வாய்க் கூறிக்கொண்டாலும் இவர்களைப்பற்றி நன்கறிந்தவர்கள் இவர்களிடம் ஒரு கறுப்புப் புள்ளி யிருப் பதாகவே கூறுகிறார்கள். அந்தப் பிச்சிமலை நாகம்மாள் இருக்கிறாள், அது அவளுடைய மெய்யான பெயரல்லவாம்;

அவள் மனம் சரியான நிலைமையிலில்லை. அவளை யிவர்கள் ஏதோ விசேஷ அறிவுடையவளென்று கருதுகிறார்கள். நான் வடநாட்டிலிருந்தால் உண்மையை யறிந்துகொண் டிருப்பேன். ஆயினும் எனக்குச் சிநேகமான வீட்டைப் பற்றி நான் ஒன்றும் கூறலாகாது'' என்றாள்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண் டிருக்கையில் மற்ற விருந்தினரெல்லாம் விடைபெற்றுக் கொண்டு ஒவ்வொரு வராக அங்கிருந்து புறப்பட்டார்கள். வீட்டு முதலாளி யாகிய தைரியநாதம்பிள்ளை தன் புத்திரி மீனாளுடைய வியாகூலத்தைப்பற்றியே சிந்தித்துக்கொண் டிருந்தபடி யால் விருந்தாளிகள் செல்வதை வழக்கம்போல் கவனித்து உபசாரத்தோடு அவர்களுக்கு விடையளிக்கவில்லை. அவ் வருடம் வசந்தமாளிகையில் நடந்த கேளிக்கை யிம்மாதிரி சந்தோஷத்திலும் கலவரத்திலும் சிலருக்குத் துயரத்திலு மாக முடிந்தது.

அதில் துயரம் உண்டானதற்குக் காரணம் காதலே யன்றி வேறில்லை. காதலிற் சம்பந்தப்பட்டவர்களே மனக் கலக்கத்திற்கும் துயரத்திற்கும் இன்னும் ஆபத்திற்கும் உள்ளானார்கள்.

முருகப்பன் ஜலபுரத்திற்குத் தன் தந்தையிடம் திரும்பி வருவதாய்க் கூறிவிட்டு வந்த காலம் கடந்து விட் டது. அவன் எப்போது வருவான் என்ற சங்கதியே தெரியவில்லை. இன்னொரு காலமாகவிருந்தால் அத்தகைய ஆலசியம் கவலையை உண்டாக்கமாட்டாது. வீட்டுக்காரி யஸ்தியாகிய சுந்தரம்மாள் "ஓகோ அங்கு வந்திருந்த மற்ற விருந்தினர்கள் ஏதேனும் வேடிக்கை நடத்து வார்கள். முருகப்பன் அதற்காக நிறுத்தப்பட் டிருப் பான்'' என்று கூறியிருப்பாள். அவள் சமயோ சிதப்படி நடக்கும் யோசனை யுடையவள். கொஞ்சகால

மாய் முருகப்பனுக்குத் தைரியநாதம் பிள்ளையின் குடும்பத்தில் சரியான நட்பில்லையென்றும், தன் தந்தையின் தேக சுகத்தைக் கருதி தான் சீக்கிரம் வந்துவிடக் கருதியே சென்றுனென்றும் அவள் அறிவாள். ஆதலால் அவள் மனதில் கொஞ்சம் கலவரமேயிருந்தது. அவள் ஆவலோடு தன் எஜமானுகிய மார்க்கசேனனுடைய முகத்தையே யடிக்கடி நோக்கிக்கொண் டிருந்தாள். ஆனுல் மார்க்க சேனனுடைய மனமோ இருண்ட நடு இரவிலுள்ள ஏரியைப்போல் ஒன்றும் அறிய முடியாததாயிருந்தது. அவன் காலையில் போசனம் செய்வது, உலவப்போவது, வாசிப்பது முதலிய தொழில்கள் கிரமப்படி தவருமல் நடந்து கொண்டிருந்ததால் தன் தனயனைப்பற்றிச் சிந்திக்க அவனுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை போலும்.

கடைசியில் பலவிடங்களிலிருந்து சுந்தரம்மாளுக்கு எட்டிய சங்கதிகளால் அம்மாது இன்னமும் தன் மனக் கலக்கத்தை யடக்கிக்கொண்டிருக்க முடியவில்லை. ஆகையால் "சரி இனி நமது எஜமானுக்கு என்ன கோபம் வந்தாலும் சரி, நம்மை வேலையினின்று நீக்கி விட்டாலும் சரி, நமது மனக்கலக்கத்தை யறிவித்துவிட வேண்டியதே" என்று தீர்மானித்து விட்டாள். முருகப்பனுடைய நல்ல மாதிரியாலும் அவனுக்குத் தன்னிடமிருந்த விசுவாசத்தாலும், தன் நண்பனுன ஹாக்கர் தடுத்ததாலும் தன் எஜமானிடம் முருகப்பன் மேல் கோபம் உண்டாக்கத் தக்க எந்த சங்கதியையும் கூற அவளுக்குப் பிரியமில்லை. இத்தகைய சந்தர்ப்பத்தில் கூருமலிருக்கவும் முடியாது. ஆகையால் மிக்க ஜாக்கிரதையோடு கூறக் கருதினுள்.

முருகப்பன் தந்தையோ தன் வரையில் தான் எந்நேரமும் தனியாகவே உலவிக் கொண்டும், சிந்தித்துக் கொண்டும், எதையோ வாசித்துக்கொண்டும் இருக்கும்

பழக்கத்தால் மிக்க அவசியமான விஷயமன்றி ஒருவரும் தன்னிடம் வந்து பேசலாகாதென்ற விருப்பமுடையவன். யாருக்கும் அவனிடம் பேசுவதென்றால் அச்சமே. ஆகையால் அவனிடம் அனுகூலமாய் ஒரு சங்கதியைப் பேச வேண்டுமாயின் பக்குவமாய்ப் பேசியச் சங்கதியைப்பற்றி அவனே பிரஸ்தாபிக்கும்படி செய்யவேண்டும் என்று சுந்தரம்மாள் தனக்குள் சூக்குமமாய்ச் சிந்தனைசெய்து கொண்டாள்.

இத்தகைய யோசனையின்மேல், சுந்தரம்மாள் ஒரு தந்திரமான யோசனை செய்தாள். அதாவது அப்போது போசனம் ஆயத்தம் செய்வதில் தன் எஜமான் கூட இன்னொருவர் போசனம் செய்வார் என்று தான் கருதியவள் போல், சுத்தமாய் யாவும் ஆயத்தம் செய்ததோடு இருவருக்குப் போஜன மளிக்க யாவும் ஆயத்தம் செய்தாள்.

இவள் செய்த இந்தத் தந்திரம் இவள் எண்ணியபடி பலன் அளித்தது. ஏனெனில் மார்க்கசேனன் இருவர்க்குப் போஜன பாத்திரங்கள் வைத்திருப்பதைக் கண்டதும், தூண்டிமுள்காரன் கண் வைப்பது போல் அவள் முகத்தையே நோக்கியபடி "என்ன? முருகப்பன் வசந்த மாளிகையினின்றும் திரும்பி வந்து விட்டானா?" என்று கேட்டான்.

சுந்தரம்மாளுக்கு வேண்டியது அவ்வளவு தான். அவள் துயரமும் ஆவலுமுடையவள்போல், பாதி உண்மையும் பாதி அபிநயமுமாக, "அப்படிப்பட்ட சங்கதியொன்றும் கிடைக்கவில்லை. முருகப்பன் க்ஷேமமாய் வீடு வந்து சேர்ந்தால் அது மிக்க சந்தோஷமான சங்கதியாகவே யிருக்கும்" என்றாள்.

அவள் மொழிகளைக் கேட்டதே மாக்கசேனன் மிக்க கோபமடைந்து "அவன் இங்கில்லையென்று தெரிந்திருக்

கையில் நீ இருவர்க்கு ஏன் ஆகாரம் வட்டித்தாய்?'' என்றான். ஆனால் சுந்தரம்மாள் தைரியமாய் "யாரேனும் நமது முருகப்பனைப்பற்றிக் கவனித்திருப்பார்கள்; ஆதலால் எதற்கும் இருவர்க்கும் போஜனம் ஆயத்தம் செய்வது நலமென்று எண்ணினேன். முருகப்பன் முன்னமே வந்துவிட்டிருக்கவேண்டும். அப்படியே நான் எண்ணியிருந்தேன். ஆனால் அவன் வரவேண்டியகாலம் அதிகமாகக் கடந்துவிட்டது. நான் மனம் விட்டுக் கூறுவதாயின், அவன் எப்போது திரும்பி வருவானோ, ஒரு சமயம் வரவே மாட்டானோ என்ற பீதி என் மனதை வருத்துகிறது'' என்றாள்.

மார்க்கசேனனுக்கு அடக்க முடியாத கோபம் வந்துவிட்டால் எம்மாதிரிக் ஆத்திர மடைவானோ அம்மாதிரிக் கோபமடைந்து "உன் பயங்களா! என்னிடமா உன்னுடைய மூடத்தனமான பயங்களைப்பற்றியா கூறுகிறாய்? யாரிடம் கூறுகிறாய் என்பது தெரியுமா ? எனக்கு உங்கள் மாதர் சங்கதியனைத்தும் தெரியுமே. உங்கள் நிலையற்ற மனதிற்கும், மூடத்தனத்திற்கும், எல்லாம் நமக்குத் தெரியும் என்ற மமதையான குணத்திற்கும் எவ்வளவோ மூடத்தனமான பயங்கள் ஏகமாகத் தோன்றும். ஏ முட்டாள் கிழமே! உன் முட்டாள் தனத்தால் உண்டான பீதியைப் பற்றி எனக்கென்ன ஆகவேண்டியது?'' என்றான்.

சாதாரணமாய் ஒருமாது தன் எஜமான் கூறிய இத்தகைய பதிலைக் கேட்டதே ஒன்றும் கூறமுடியாமல் விழிப்பாள். ஆனால் மாதர்களிடம் ஒரு விசேஷகுணமுண்டு. அதாவது, ஒரு குழந்தை தன் பெற்றோர்களால் குரூரமாக நடத்தப்படினும். அல்லது ஒரு புத்திரனோ புத்திரியோ தன் பெற்றோரை அவமரியாதையாய் நடத்தினும், அத்தகைய சங்கதியைக் கேட்டதே அண்டையயலிலுள்ள மாதர்களெல்லாம் குற்றமாய் நடத்தப் பட்டவர்கள் பட்

சம் கூட்டமாகச் சேர்ந்துகொள்வார்கள். சுந்தரம்மாள் இயற்கையில் ஆவலும் பேராசையு முடையவ ளெனினும், இந்த விஷயத்தில் தன் போன்ற மாதர்களுக்குரிய இப் பெருந்தன்மையான குணமும் உடையவள். இச்சமயம் அக்குணம் அவள் மனதில் அதிகமாக உறுத்தியது. ஆகையால் அவள் தன் எஜமானை யெதிர்த்து அவனுடைய இரக்கமற்ற கல்மனதைப்பற்றிக் கண்டிக்கத் தொடங்கி விட்டாள். அவள் பேசியபோது காட்டிய தைரியம் அவளுக்கே பிறகு மிக்க ஆச்சரியத்தை யுண்டாக்கிற்று.

அவள் மார்க்கசேனனை நோக்கி, "எனக்கு முருகப்பன்மேல் என் சொந்தப் புத்திரன்மேல் காட்டக்கூடிய அன்பைவிட அதிக அன்பிருந்தாலும் அவனுக்காக நான் பீதியடையவில்லை. யாரேனும் - தங்களைப்போன்ற தந்தை-மகன் ஒருவாரமாய் எங்கோ போய் விட்டிருக்கும்போது போனவிடமின்னதென்று தெரியவில்லை - எப்போது வருவானென்றும் ஒரு சங்கதியும் தெரியவில்லை - இப்படியிருக்க எந்தத் தந்தையேனும் அவனைப்பற்றி விசாரிக்காமல் பேசாமலிருப்பானோ? தந்தைக்குப் புத்திரன்மேல் இப்படிப்பட்ட அசட்டைத்தனம்கூட எங்கேனுமுண்டா! அந்தோ இவ்வூரில் அவனை யறியாதவர்கள் ஒருவருமில்லையே. அவனுக்கொன்று நேர்ந்தால் இவ்வூரிலுள்ள அனைவரும் கண்ணீர் விடுவார்களே" என்றாள்.

அவள் அவ்வளவு துணிகரமாய்த் தன் முன் பேசுவது மார்க்கசேனனுக்கு மிக்க வியப்பாகவிருந்தது. ஆயினும் அவன் கண்கள் சிவந்து "ஏ மூடமே! அவனுக்கென்ன கெடுதி நேரப்போகிறது. நன்மையோடேயே வருவான். அவன் தன் சொந்த நடக்கையால் தனக்குத் தானே ஏதேனும் தீங்கு தேடிக்கொண்டால்தான் தேடிக்கொள்ளலாம். நீ சுத்த முட்டாள் கிழவி" என்றான்.

கிழவிக்கு என்றுமில்லாதபடி இரண்டு மூன்று முறை அவன் வார்த்தைகளுக்குப் பதில் கூறி பழக்கமாய் விட்டதால் தைரியத்தோடு பிடித்தபிடி விடாமல் பேசத் தொடங்கி, "எஜமானே! நான் என்னமோ முட்டாள் தான். அதிற் சந்தேகமில்லை. மூன்று நான்கு நாட்களுக்கு முன் புயற்காற்றடித்தபோது அனேகம் படகுகள் கடலில் கவிழ்ந்து முழுகிவிட்டன. அவற்றில் ஒன்றில் பாபம் நமது வாலிபன் இருந்திருக்கலாகாதா? அப்படி நினைக்கின்றேன்; அவன் மழை பெய்த சமயம் வீட்டிற்குத் திரும்பி வந்து கொண்டிருந்து வழியிலுள்ள பொய் மண்ணில் அழுந்தி விட்டிருந்தால்? அல்லது செங்குத்தான எந்தப்பாறையிலேனும் ஏறித் தவறி விழுந்து விட்டிருக்கலாகாதா? நமது வாலிபனுடைய துணிகரச்செயல் யாவர்க்கும் தெரிந்ததே. அப்படியவனுக்குஏதேனும் ஆபத்து நேர்ந்துவிட்டாலோ? அப்போது யார் மூடர்? யார் முட்டாள்? ஓ கடவுளே! அவன் தாயற்றபிள்ளை. அவனை நீரே காப்பாற்ற வேண்டும். அடடா! அவன் தாய்மட்டு மிருந்தால் இதுகாறும் தன் மகன், ஏக புத்திரனாகிய முருகப்பன் இத்தனை நாளாக வராமலிருப்பதற்குச் சும்மா இருப்பாளா! எவ்வளவோ சிரத்தை யெடுத்துக்கொண்டு தேடுவாளே. தன் புத்திரனைக்காணமல் அவள் போஜனம் செய்வாளா? ஓ தெய்வமே! அக்குழந்தையை நீயே காப்பாற்றவேண்டும்" என்று பிரலாபித்தாள்.

இக்கடைசி மொழிகளைகளைக் கேட்டதே மார்க்கசேனன் மனம் கரைந்து கலக்கமடைந்து விட்டது. எத்தகைய கல்மனமுடையவனேனும் மனித வர்க்கத்தையே அடியோடு வெறுத்தவனாயினும் புத்திரன்மேலுள்ள வாஞ்சை யொழியுமோ. அதையறிந்தேயன்றோ ஆன்றோர் "கடந்த ஞானியும் கடப்பரோ மக்கள்மேல் காதல்" என்று கூறிப்போந்தனர், மார்க்கசேனன் மிக்க கோபமடைந்தபோதிலும் தன் மனதிலுண்டான கலக்கத்தால் உடனே பேசமுடியாமலிருந்தான். சுந்தரம்மாள் அவன் கோபத்திற்கஞ்சாமல் இதுவே சமயமென்று துணிந்து பேசக்கருதி,

"ஒகோ! எஜமானே! யாருடையதென்று தெரியாமல் கடற்கரையில் எறியப்பட்ட அற்பப் பொருள்களை யாரோ எடுத்துக்கொண்டார்களென்று தாங்கள் மிக்க கோப மடைந்தீர்கள். இதோ செங்கரும்பைப்போன்ற தங்கக் கட்டியான வாலிபன் என்ன ஆபத்தில் சிக்கிக்கொண்டானே தெரியவில்லை. அவன் கதி யென்னுயிற்றென்று கண்டறிய முயல்வார் எவரையும் காணேம்" என்றாள்.

மார்க்கசேனனுக்கு அதற்குமேலும் சமாளிக்க முடியவில்லை. அவன் அம்மூதாட்டியை நோக்கி "என் வாசக சாலையறைக்குச் சென்று அங்கு மேஜைமேல் வைக்கப்பட்டிருக்கும் மருந்துப் புட்டியை யெடுத்துவா!" என்றான். இது காறும் அவன் அந்த அறைக்குள் ஒருவரையும் அனுப்பியதில்லை.

சுந்தரம்மாள் அவ்வாறே அந்த அறைக்குச் சென்று பார்த்தாள். அங்கு அனேக புட்டிகள் இருந்தன. அவை பலநாட்டுக் குடிவகைகள். அவைகளில் சிலந்தி கூடுகட்டியிருப்பதை நோக்கில் அவை அனேக நாட்களாய் உபயோகிக்கப்படாமல் அங்கு வைக்கப்பட்டிருக்கின்றன வென்று தெரிந்தது. சுந்தரம்மாள் கடைசியில் ஒரு புட்டியை யெடுத்துத் திறந்து அதிலிருந்த திரவபதார்த்தத்தில் கொஞ்சம் அருந்திப்பார்த்தாள். அது மலை நாட்டில் உற்பத்தியாகும் ஒருவகைச் சாராயம் என்று தெரிந்து அதையும் ஒரு கிண்ணத்தையும் எடுத்துக்கொண்டு மார்க்கசேனனிடம் வந்து அச்சாரயத்தில் கொஞ்சமாக அக்கிண்ணத்தில் விட்டுக் கொடுத்தாள்.

மார்க்கசேனன் "நிறையவிடு" என்று ஆத்திரத்தோடு மொழிந்தான். மூதாட்டி யவ்வாறே விட்டுக்கொடுத்து விட்டாள். அவன் அதை யொரே மூச்சாயருந்திவிட்டதைக் கண்டதும் "ஐயோ கடவுளே! இவன் எப்போதும் சாராய மருந்துவதில் விருப்புடையவனல்லவே. இப்போது ஏக காலத்தில் இவ்வளவு அதிகமா யருந்திவிட்டானே. இவனைச் சமாளிக்க யாரால் முடியும். இதென்ன ஒரு புது வம்பாய் முடியுமோ? நாம் என்னசெய்வது? இந்த வெறி